விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

சங்கு 23
ஒலி 051 வள்ளுவர் ஆண்டு 2053 தை 26 செவ்வாய்க்கிழமை (08.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

பொலிகண்டி மேற்கில்

## குளியலறையிலிருந்து ஒருவரது சடலம் மீட்பு

(கரணவாய்)

பொலிகண்டி மேற்கில் வீட்டில் உள்ள குளியல றையிலிருந்து குடும் பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று திங்கட்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் நம்பிக் காவத்தை, பொலிகண்டி மேற்கைச் சேர்ந்த சதாசி வம் யோகலிங்கம் (வயது-58) என்பவரா வார்.

15

மன்னார் - பள்ளமடுவில்

## இளம் குடும்பஸ்தர் நேற்று சடலமாக மீட்பு

(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பள்ளமடு-விடத்தல்தீவு பிரதான வீதிக்கு அருகில் நேற்று திங்கட்கிழமை காலை இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலமாக மீட்கப்பட்டவர் சன்னார் கிராமத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான கே.பாஸ்கரன்

15

(ஜெய்சங்கர்-பீரிஸ் பேச்சு)


# மீனவர் விவகாரம் உட்பட பல்வேறு விடயங்கள் ஆராய்வு

மோடியை சந்தித்து பேச பீரிஸ் திட்டம்

(கொழும்பு)

இலங்கை -இந்திய மீனவர் விவகாரம் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருடன் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல் பீரிஸ் கலந்துரையாடியுள்ளார். மேலும் இந்திய பிரதமர் மோடியுடனும் சந்திக்க திட்டமிட்டுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## மண்மேடு சரிந்ததில் மூவர் உயிரிழப்பு

கண்டியில் சம்பவம்

(கண்டி)

கண்டி - வத்தேகம பிரதேசத்தில் மண்மேடு ஒன்று சரிந்து விழுந்ததில் மூவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. குறித்த சம்பவம் நேற்று பிற்பகல் இடம்

15

## பொது போக்குவரத்தின்போது தடுப்பூசி அட்டை கட்டாயமாக்கப்படும்

இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம

(கொழும்பு)

தடுப்பூசி அட்டைகள் பொதுப் போக்குவரத்துக்களின்போது கட்டாயமாக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். கண்டியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போது அவர் இதனைக் கூறியுள்ளார். மூன்று தடுப்பூசிகளைச் செலுத்தியவர்கள் மாத்திரமே பயணிக்க முடியும் என்று சுகாதார பிரிவினர் அறிவித்தால், அதன்படி, போக்

15

## சுங்கம் வசமுள்ள அத்தியாவசியப் பொருட்களை உடன் விடுவிக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை

அமைச்சர் பசில் ராஜபக்ச தலைமையில் புதிய குழு

(கொழும்பு)

சுங்கத் திணைக்களத்தின் வசமுள்ள அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை உடனடியாக விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். சந்தையில் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாதிருப்பதை இலக்கு வைத்தே, ஜனாதிபதி அவர்களினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைத் தட்டுப்பாடின்றி வழங்

15

## கொரோனா 26 பேர் பலி

(கொழும்பு)

கொரோனா தொற்றால் நாட்டில் மேலும் 26 பேர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில்,

15

## தென்மராட்சி வரணிப் பகுதியில் படையினர் துப்பாக்கிச் சூடு

இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - தென்மராட்சி, வரணி பிரதேசத்தில் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் காயமடைந்

15

## இந்திய மீனவர்களது 139 இழுவை படகுகள்

59 இலட்சம் ரூபாய்க்கு மேலாக ஏல விற்பனை



(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களது 139 இழுவைப் படகுகள் 59 இலட்சம் ரூபாய்க்கு மேலாக நேற்று ஏல விற்பனை செய்யப்பட்டுள்ளன.

(03ஆம் பக்கம் பார்க்க)

## இன்றுமுதல் 11 ஆம் திகதிவரை பாராளுமன்ற அமர்வுகள்

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வுகள் இன்றுமுதல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது. பிரதி சபாநாயகரும் குழுக்களின் தலைவருமான ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற

15

## நாட்டில் மேலும் +1,298 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் நேற்று

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வவுனியாவில் பட்டப்பகலில் பணம், நகை திருட்டு

## பொலிஸார் விசாரணை

(வவுனியா)

வவுனியாவில் பட்டப்பகலில் வீடு புகுந்து நகை மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ள நிலையில் மோப்ப நாயின் துணையுடன் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நேற்று மதியம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா, பண்டாரிக்குளம், மாடசாமி கோவில் வீதியில் உள்ள வீடு ஒன்றில் வசித்து வந்தவர்கள் உறவினர் ஒருவரின் பூப்புனித நீராட்டு விழாவிற்கு காலை சென்றிருந்தனர்.

அயல் வீட்டாரும் உறவினர் வீட்டுக்கு சென்றிருந்தமையால் கடந்த சில நாட்களாக வீட்டில் இருக்கவில்லை.

இதனையறிந்த திருடர்கள் பட்டப்பகலில் மதில் ஊடாக குறித்த வீட்டிற்குள் நுழைந்து, படி மூலம் வீட்டின் மேற்கூரைப் பகுதிக்கு சென்று சமையலறை ஓட்டை கழற்றி அதனூடாக உட்கூரைப் பகுதியை உடைத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்துள்ளார்கள்.

நுழைந்தவர்கள் வீட்டின் அனைத்து பகுதிகளிலும் நகை, பணம் என்பவற்றை சல்லடை போட்டு தேடியுள்ளதுடன், வீட்டில் இருந்த நான்கு பவுண் நகை மற்றும் 5 ஆயிரம் ரூபாய் பணத்தையும் எடுத்துக் கொண்டு கதவினை திறந்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ.ஏ.ஏ.எஸ்.ஜயக்கொடி தலைமையில் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் வருகை தந்து மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-250,299)

# ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் குழுக்கூட்டம்

(கொழும்பு)

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் குழுக்கூட்டம் அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரது தலைமையில் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது.

அடுத்த வார பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மின் நெருக்கடிக்குத் தீர்வு காணல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களைப் பயன்படுத்துதல், ஏற்றுமதிப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது விவாதிக்கப்பட்டன.

எதிர்காலத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்காக நடைமுறைப் படுத்தப்படும் வேலைத்திட்டம் தொடர்பில் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ விசேட விளக்கமளித்தார்.

குறித்த கூட்டத்தில் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதமரின் மேலதிக செயலாளர் சட்டத்தரணி சமிந்த குலரத்ன, பிரதமரின் பாராளுமன்ற விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு செயலாளர் பிரியந்த ரத்நாயக்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ம)

# வடக்கில் மேலும் 17 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் 1, 2 வயது ஆண் குழந்தைகள் இருவருடன் 14 பேர் உட்பட வடக்கில் மேலும் 17 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை ஆகிய ஆய்வுகூடங்களில் நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் இவ்வாறு 17 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், யாழ். போதனா வைத்தியசாலையில் - 14 பேர். (ஒன்று மற்றும் 2 வயது ஆண் குழந்தைகள் உட்பட)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் - 02 பேர் (16 வயது சிறுமி மற்றும் 72 வயது முதியவர்) கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் - ஒருவர் (33 வயது பெண்)

இவ்வாறு 17 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம)

# சுவிஸில் கோர விபத்து; யாழ்.இளைஞன் பலி

(பேர்ன்)

சுவிட்ஸர்லாந்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ்.இளைஞர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உயிரிழந்த இளைஞர் யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியை சேர்ந்த 31 வயதானவர் எனவும் கூறப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை வாகன விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில், குறித்த இளைஞரை மீட்ட பொலிஸார் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும் அவர் சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம)

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் அரியாலை மத்தி கண்டி வீதிக்கு சமீபமாக சகல வசதிகள் அடங்கிய வீடு வாடகைக்கு உண்டு.

021 222 8511
077 339 9072
(10087)

**கடை வாடகைக்கு**

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட மானிப்பாய் வீதியில்
நீளம் - 37', அகலம் - 20'
(10088)
077 670 5689

**JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE**

Registered with Tertiary and Vocational Education Commission under P25/0026
Established in 1972
Kaithady-Manipay Road, Maruthanaarmadam, Chunnakam, Sri Lanka.
Telephone No: 021 224 1420 E-mail:-jcinstituteofagriculture@gmail.com

**விசேட விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்**

Agriculture Prodution Technology (HND) பயிற்சி நெறிக்கு ஆங்கில மொழி மூலம் போதிப்பதற்கு விண்ணப்பதாரிகளிடம் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

தகைமை - **B.SC in Agriculture**

14.02.2022ற்கு முன்னதாக தங்கள் சுயவிபரத்துடன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விரிவுரையாளருக்கான விண்ணப்பம் என குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பத்தை யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், மருதனார்மடம், சுன்னாகம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

நேர்முகப்பரீட்சையின்போது உறவினர் அல்லாத இருவரின் சிபார்சுக் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு: (நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்)
தென்னிந்திய திருச்சபை
பேராயர் ஆதீனக் காரியாலயம், வட்டுக்கோட்டை.
(யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முன்னால்)
(C-3726)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 13 . 08 . 1982 | மறைவு 20 . 01 . 2021

20.01.2021 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் எம்வழிகாட்டி

**அமரர் கிருஷ்ணன் பிரதீபன் (மணி)**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுகளில்.

உழைப்பின் சிகரமாய்
உண்மையின் உறைவிடமாய்
உறவுகளுக்காக வாழ்ந்தவனே
எம் குடும்ப வழிகாட்டியாக
எங்களுக்காகவே வாழ்ந்தவனே
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
அழியாது என்றும் உன் நினைவுகள்
புன்னகை கலந்த வதனமுடைய
உன் திருமுகத்தை ஒருதரம் காட்டி
"மணி மணி" என அழைக்கும்
உறவுகளுக்காக ஒரு கதை கூறிடையா !
உங்களின் ஆத்மா சாந்தியடைய
மால சந்தையானை வேண்டுகிறோம்.
(C-3717)

தாமன் தோட்டம்,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 139 இந்திய படகுகள் ஏலத்தில் விற்பனை

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் - காரைநகரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 139 இந்தியப் படகுகள் 59 லட்சம் ரூபாய்க்கும் மேலாக நேற்று திங்கட்கிழமை ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன.**

இதன்போது 88 அடி நீள மான மீன்பிடிப் படகொன்று அதிக தொகையாக 13 இலட் சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனை செய்ய ப்பட்டது.

கொழும்பில் இருந்து வந்த கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள தலைமையக அதிகாரிகள் குழு காரைநகரில் ஏலத்தில் விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன். இவ்வாறு விற்பனை செய்யப் பட்டுள்ள படகுகளை கடந்த ஒருவாரமாக அதிகமானோர் பார்வையிட்ட நிலையில் நேற் றும் பலரும் பார்வையிட்டனர்.



இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்தவர்கள் ஏலத்தில் ஆரம்ப வைப்பு தொகையாக ஆயிரம் ரூபாய் பணத்தை செலுத்தி ஏலத்தில் ஆர்வத்துடன் பங் கேற்றனர்.

இலங்கையின் 5 துறைமுக ங்களில் தடுத்து வைக்கப்பட் டுள்ள இந்திய மீனவர்களிற்குச் சொந்தமான மீன்பிடி படகுகள் நேற்று முதல் ஏல விற்பனை ஆரம்பமானது. (4-5-18-104)

# மீனவர்கள் பிரச்சினை குறித்து பீரிஸ்-ஜெய்சங்கர் பேச்சு



(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நேற்று திங் கட்கிழமை புது டில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை சந்தித்தார்.

இந்த சந்திப்பின் போது இலங்கையை பலப்படுத்தும் பொருளாதார மற்றும் முதலீட்டு முயற்சிகள் குறித்தும் இலங் கையின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான மேல திக நடவடிக்கைகள் குறித்து இதன்போது அவதானம் செலுத் தப்பட்டதாக எஸ்.ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

மேலும், மீனவர்கள் விவ காரம் குறித்தும், இருதரப்பு பொறிமுறைகளை முன்கொ ட்டியே மேற்கொள்வது தொடர் பாகவும் இச்சந்திப்பில் பேசப்ப ட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

# எரிபொருள் விலை உயர்வு மக்கள் மீது மேலுமொரு சுமை

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் எரிபொருள் விலையை 30 வீதத்தால் அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சி குற்றம் சாட்டி யுள்ளது.



கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கல ந்துகொண்டு கருத்து தெரிவி க்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜய வர்தன இதனை தெரிவித் தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் 137 ரூபாயாக இருந்த ஒரு லீற்றர் பெற்றோல் விலை தற்போது 184 ஆக உயர்ந்துள்ளது என சுட்டிக் காட்டினார்.

மேலும் பெற்றோல் விலை அதிகரிப்புடன், முச்சக்கர வண்டி கட்டணங்கள் அதிகரி ப்பு டீசல் விலை அதிகரிப்பு மீனவர்களை நேரடியாகப் பாதி த்துள்ளது என்றும் தெரிவித் தார்.

நாட்டின் நிதி நிலை தொட ர்பாக அரசாங்கம் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என் பது சில அமைச்சர்களின் கரு த்துக்களில் புலனாகிறது.

தற்போது 47,000 மெட்ரிக் தொன் அத்தியாவசியப் பொரு ட்களை ஏற்றிக்கொண்டு சுமார் 2,000 கப்பல்கள் துறைமுக த்தில் நிறுத்தப்பட்டுள்ளன என காவிந்த ஜயவர்தன தெரிவித் தார்.

அத்தியாவசியப் பொருட் களை இறக்குமதி செய்யவோ அல்லது துறைமுகத்தில் சிக் கியுள்ள பொருட்களை விடு விக்கவோ அரசாங்கத்திடம் நிதி இல்லை என்றும் அவர் தெரி வித்தார். (நி-5)

# வடகொரியாவிடம் இருந்து ஆயுதங்கள் வாங்கியதாக கூறிய பசில் பதவி விலக வேண்டும்

## எதிர்க்கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

கறுப்பு பணத்தைப் பய ன்படுத்தி வடகொரியாவிடம் இருந்து ஆயுதங்களை இல ங்கை வாங்கியதாகக் கூறிய நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி வலியுறு த்தியுள்ளது.

உள்நாட்டுப் போர் உச்சக் கட்டத்தில் இருந்தபோது, கறு ப்புச் சந்தையில் கிடைத்த பண த்தைப் பயன்படுத்தி, வடகொரி யாவிடம் இருந்து இலங்கை ஆயுதங்களை வாங்கியதாக பசில் ராஜபக்ஷ கூறியதாக ஊட கங்களில் செய்திகள் வெளி யாகின.

அதன் பின்னர் வெளிவிவ கார அமைச்சு அதனை நிராக ரித்து ஊடக அறிக்கையை வெளியிட்டது.

ஆனால் நிதியமைச்சரால் எந்த மறுப்பும் வெளியிடப்பட வில்லை.

இந்நிலையிலேயே, பசில் ராஜபக்ஷ பதவி விலக வேண் டும் என ஐக்கிய மக்கள் சக்தி யின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார நேற்று திங் கட்கிழமை செய்தியாளர்க ளிடம் தெரிவித்தார்.

கறுப்புப் பணத்தை எவரும் பயன்படுத்துவதற்கு எமது சட்ட ங்களில் இடமில்லை.

சர்வதேச சமூகத்தால் தடைகள் விதிக்கப்பட்ட ஒரு நாட்டைக் கையாள்வதற்கான ஆணையை பொதுமக்கள் அர சாங்கத்திற்கு வழங்கவில்லை என்றும் அவர் தெரிவித் தார். (நி-5)

# நாடளாவிய ரீதியில் தாதியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

## * மருத்துவமனைகள் ஸ்தம்பிதம்

## * நோயாளர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

சம்பளப் பிரச்சினை உள் ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் நேற்று தாதிய ர்கள் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட னர்.

தற்போது 3,000 ரூபா வாக உள்ள விசேட கட மைக் கொடுப்பனவை 10,000 ரூபாவாக உயர்த் துதல், ஆசிரியர் சேவை சம்பள உயர்வின் மூலம் தாதிய சேவைக்கு ஏற்பட் டுள்ள சம்பள முரண்பா ட்டைத் தீர்த்தல், தொழில் வல்லுநர் பட்டதாரிகளுக்கு திருத்தியமைத்த சம்பள அளவுத்திட்டத்தை நிர்ணய த்துடன் தகுந்த பதவி வாய்ப் புக்களைக் கிடைக்கச் செய் தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வை த்து இந்த போராட்டம் முன் னெடுக்கப்பட்டு வருகிறது.

இதனால் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களு க்கு முகங்கொடுத்த னர். (4-5-33-250)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டி

## இந்திய அணி சிறப்பான வெற்றி



மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1-0 என்ற கணக்கில் இந்தியக் கிரிக்கெட் அணி முன்னிலைப் பெற்றுள்ளது.

அஹமதாபாத் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியக் கிரிக்கெட் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, 43.5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 176 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஜேஸன் ஹோல்டர் 57 ஓட்டங்களையும் பெபியன் அலென் 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், யுஸ்வேந்திர சஹால் 4 விக்கெட்டுகளையும் வொஷிங்டன் சுந்தர் 3 விக்கெட்டுகளையும் பிரசீத் கிருஸ்னா 2 விக்கெட்டுகளையும் சிராஜ் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 177 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இந்தியக் கிரிக்கெட் அணி, 28 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், இந்தியக் கிரிக்கெட் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ரோஹித் சர்மா 60 ஓட்டங்களையும் சூர்யா குமார் யாதவ் ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், அல்சார்ரி ஜோசப் 2 விக்கெட்டுகளையும் அகீல் ஹொசைன் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 9.5 ஓவர்கள் பந்துவீச்சில் 49 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்திய யுஸ்வேந்திர சஹால் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி, எதிர்வரும் 11 ஆம் திகதி அஹமதாபாத் மைதானத்தில் நடைபெறவுள்ளது. (4-6)

# குளிர்கால ஒலிம்பிக்; நோர்வே முன்னிலை




சீனாவின் பெய்ஜிங் நகரில் நடைபெற்று வரும் குளிர்கால ஒலிம்பிக் போட்டித் தொடரின் பதக்க பட்டியலில், நோர்வே முதலிடம் பிடித்துள்ளது.

இரண்டு தங்க பதக்கங்கள், ஒரு வெண்கல பதக்கம் என மூன்று பதக்கங்களுடன் நோர்வே முதலிடம் பிடித்துள்ளது.

இதனைத்தொடர்ந்து இரண்டு தங்க பதக்கங்களுடன் சுவீடன் இரண்டாவது இடத்திலும், ரஷ்யா ஒரு தங்க பதக்கம் தலா இரண்டு வெள்ளி மற்றும் வெண்கல பதக்கங்கள் என மொத்தம் ஐந்து பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

இதனிடையே குளிர்கால ஒலிம்பிக் போட்டித் தொடரில் பங்கேற்க வந்தவர்களில் 10 பேருக்கு, கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

குளிர்கால ஒலிம்பிக்கின் ஒருங்கிணைப்புக் குழு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட தகவலில், 'மொத்தம் 72,000 கொரோனா நோய்த் தொற்று பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன என்றும், கடந்த 24 மணி நேரத்தில், 4 போட்டியாளர்கள் உட்பட 10 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் தொற்று கண்டறியப்பட்ட போட்டியாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2506

**செந்தூரன்**

வாழ வேண்டிய முட்டையும் வாழ்ந்து முடிந்த கோழியும்



ஒரே தட்டில் செத்து கிடப்பதே பிரியாணி என்கிறோம்

**மிர்னாளினி**

ஓவியத்தில் கூட ஓய்வில்லாதவள்



அம்மா

**கேதீஸ்**

குடும்ப தலையணை



**மேனகா**

பிறப்பால் ஏழைதான்



குணத்தால் கோடீஸ்வரி

**கனிஸ்ரலா**

தேவையில்லாத பிரச்சினையில் தலையிட்டால்



மாவீரனும் மண்டியிட வேண்டியது தான்

**மேவின்**

செல்போன ஒரு மணி நேரம் ஸ்விட்ச் ஓப் பண்ணி வைத்து பாருங்க



ஏதோ இந்த கிரகத்துல இருந்து நம்மள தள்ளி வெச்ச மாதிரியே ஒரு பீலிங்கு வரும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொவிட் விதிமுறைகளை மீறி நடந்து கொள்ளும் சுற்றுலாப் பயணிகள்

## அச்சத்தில் மக்கள்



(ஹற்றன்)

நுவரெலியாவில் வார விடுமுறை நாட்களில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து வருவதால் கொரோனா தொற்று அதிகரித்து விடுமோ என்ற அச்சத்தில் நுவரெலியா வாழ் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியாவில் வார இறுதி நாட்களிலும் ஏனைய விடுமுறை நாட்களிலும் வெளி மாவட்டங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பெருந்தொகையான சுற்றுலாப் பயணிகள் நுவரெலியாவிற்கு வருகை தருகின்றனர்.

இவ்வாறு நுவரெலியாவிற்கு வருகைதரும் சுற்றுலா பயணிகள் கொரோனாத் தொற்று தடுப்பு பிரிவினரால் அறிவிக்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதில்லை. முகக் கவசங்களை அணியாமலும் இடை வெளிகளை பின்பற்றாமலும் அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றனர்.

இதனை எவரும் கண்டு கொள்வதில்லை. இதனால் இங்குள்ள மக்கள் கொரோனா தொற்று அதிகரித்து விடுமோ என்ற அச்சத்தில் இருக்கின்றனர்.

இலங்கையில் ஏனைய பிரதேசங்களில் தொற்றாளர்கள் அதிகரிப்பது போலவே நுவரெலியாவிலும் தொற்றாளர்கள் அதிகரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது (நி-5)



ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்.போதனா மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவின் அனுசரணையில் இரத்ததான முகாம் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆவரங்கால் சிவன் கோவில் மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்:-ரவிசாந்)

# மத்தல விமான நிலையத்தில் சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பு

(கொழும்பு)

மத்தல மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை பாரிய அளவில் அதிகரித்துள்ளது.

குறித்த விமான நிலையத்தில் சுற்றுலா பயணிகள் நிறைந்துள்ளதனை பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக உள்ளதென மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

மாதத்திற்கு குறைந்த பட்சம் 125,000 சுற்றுலா பயணிகள் வரும் விமான நிலையமாக மத்தல விமான நிலையம் எதிர்வரும் காலங்களில் மாற வுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக சுற்றுலாத்துறை படிப்படியாக வளர்ச்சி அடையத் தொடங்கியுள்ளது. இதன்மூலம் டொலர் நெருக்கடிக்கு தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி-5)

# போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீருக்கான புதிய விலைகள் அறிவிப்பு

(கொழும்பு)


போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீருக்கான புதிய விலைகள், இலங்கை போத்தல் குடிநீர் சங்கத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீருக்கான கட்டுப்பாட்டு விலைகளை நீக்கி அண்மையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

இந்த நிலையிலேயே, புதிய விலைகளை போத்தல் குடிநீர் சங்கம் நேற்று திங்கட்கிழமை அறிவித்துள்ளது.

அதற்கமைய போத்தல் குடிநீர் 500 மில்லி லீற்றருக்கான விலை 50 ரூபாவாகவும் ஒரு லீற்றருக்கான விலை 70 ரூபாவாகவும் 1.5 லீற்றருக்கான விலை 90 ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல, 5 லீற்றருக்கான விலை 200 ரூபாவாகவும் 7 லீற்றருக்கான விலை 240 ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)



காங்கேசன்துறை முதலி வளவு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மஹாகும்பாபிஷேகம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம்:-ரவிசாந்)

# இராசிபலன்

08.02.2022
தை 26, செவ்வாய்க்கிழமை
சப்தமி முற்பகல் 10.00 மணிவரை

பரணி பின்னிரவு 12.35 மணிவரை
சுபநேரம் - 11.05-12.35 மணிவரை
இராகுகாலம் -3.35-5.05 மணிவரை

சந்திராஷ்டமம்- உத்தரம், அத்தம்

வளவன்




திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.




கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.




பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நண்பர்கள் மூலம் நன்மைகள் நடைபெறலாம், போசன நன்மையுண்டு.




நண்பர்கள் வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம்.




எதிலும் வேகத்தைக் குறைத்து பொறுமையாக செயற்படுவது நல்லது, வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




வியாபார விருத்தியுண்டு, சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், சாமர்த்திமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள்.




தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், பிரயாண பயமுண்டு.




உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்தியுண்டு.




குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வாக்கு மேன்மையுண்டு.

உன்னைவிடக் குறைந்தவர்களுடன் போட்டி போட்டு விடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறை மக்கள் கலைஞர் அமைப்பினரால் அமைக்கப்பட்ட கலாநிதி நடிக மணி வி.வி.வைரமுத்துவின் சிலை திறப்பு விழா எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு காங்கேசன் துறை நடேஸ்வரக் கல்லூரியில் அமைப்பின் தலைவர் கி.மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் சிறப்பு விருந்தினர்களாக வலி.வடக்கு பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, நடேஸ்வர கல்லூரி அதிபர் கு.விமலன் நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலய அதிபர் திருமதி.வசந்த ராணி சுதர்சன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக வலி வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தனும் கலந்துகொள்ளவுள்ளனர். (4-5-6)

# கால்நடைகள் வெட்டப்படுவதால் இயற்கை உரப்பாவனை குறையும்

## தீவக சிவில் சமூக அமைப்பு சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கத்தினால் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற இயற்கை உரப்பாவனை கால்நடைகள் வெட்டப்படுவது காரணமாக குறைவடைவதற்கான வாய்ப்புள்ளது என தீவக சிவில் சமூக அமைப்பின் செயலாளர் மா.இளம்பிறையன் தெரிவித்தார்.

மாடுகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்படுவது தொடர்பாக யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீவகத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கால்நடைகளின் எருக்களை உரங்களாக மாற்றி அவற்றின் மூலம் தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

அரசாங்கத்தினால் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற இயற்கை உரப்பாவனை என்பது கால்நடைகள் வெட்டப்படுவது காரணமாக குறைவடைவதற்கான வாய்ப்புள்ளது.

அத்துடன் இது விவசாயிகளுக்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

சர்வ சாதாரணமாக தீவுப் பகுதியில் ஒவ்வொரு நாளும் மாடுகள் இறைச்சிக்காக திருடப்பட்டு வெட்டப்பட்டு காவரணையும் தாண்டி யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் விற்பனைக்கு செல்கிறது.

தீவகப் பகுதிகளில் தொடர்ச்சியாக வளர்ப்பு மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படும் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

நேற்று முன்தினம் நான்கு மாடுகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்பட்டன. இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடி நடவடிக்கையை எடுக்க வேண்டும் என தெரிவித்தார். (4-5-33)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை புதன் கிழமை காலை 6.30 மணிக்கு உருத்திரபுரம் உருத்திர நாயகி உடனாய உருத்திர புரீஸ்வரர் சிவலாயத்தின் பிரதம குருக்கள் சாமஸ்ரீதேச மாணி சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்காந்தராசக் குருக்களின் அருளாசி உரையும் வேத பாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலி பரப்பு நிகழ்வாக இடம்பெறும். (4-5)

# சேதனப் பசளை உற்பத்தி நிலையத்திற்கு அடிக்கல் நாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கல்லுண்டாய் வெளியில் திண்மக்கழிவுகளை கொண்டு சேதன பசளை உற்பத்தி செய்வதற்கான புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கல்லுண்டாய் வெளியில் திண்மகழிவுகளை அகற்ற பிரதேச சபைக்கு வழங்கப்பெற்ற 10 ஏக்கர் நிலப்பரப்பில் 4 ஏக்கர் நிலப்பரப்பில் திண்மக்கழிவு முகாமைத்துவம் செய்து சேதன பசளை உற்பத்தி நிலையம் அமைக்கப்படவுள்ளது.



குறித்த பிரதேச சபையால் ஏற்கனவே கல்லுண்டாய் தரிசு நிலத்தில் மண் நிரப்பப்பட்டு சேதன பசளை உருவாக்குவதற்கான நிலையை அமைக்கப்பெற்று வடமாகாணத்தில் குறித்த சேதன பசளை நிலையம் முன்னணி வகித்து வரும் நிலையில் மேலுமொரு நிலையத்திற்கு ஒரு கோடியே 25 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இத்திண்மக் கழிவுகளை தரம் பிரிக்கும் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. (4-5-33)

## மீனவர்களின் விளக்கமறியல் 21 ஆம் திகதி வரை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 21 தமிழக மீனவர்களினதும் விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 31 ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்புக்குள் அத்துமீறி 2 படகுகளில் நுழைந்த 21 தமிழக மீனவர்களை வடமராட்சி மீனவர்கள் சுற்றி வளைத்து தடுத்து வைத்திருந்தனர்.

வடமராட்சி மீனவர்களிடமிருந்து தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் பொறுப்பெடுத்து, தமிழக மீனவர்களை கைது செய்தனர்.

அன்றைய தினம் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மறுநாள் 1 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்களை நேற்று திங்கட் கிழமை வரை விளக்க மறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

அந் நிலையில் குறித்த வழக்கு நேற்று அழைக்கப்பட்டபோது, 21 மீனவர்களையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது. (4-5-18-33-60)



யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத் யாப்பாவின் எண்ணக் கருவிற்கு அமைவாக யாழ்.மாவட்டத்தின் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் வசிக்கின்ற 50 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உணவுப் பொதிகளும் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் இராணுவத்தினரால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

## நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையில் சுகாதார உதவியாளராக தன்னார்வத்தொண்டராக மூன்று மாதங்கள் பணிபுரிவதற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9 மணிக்கு மருத்துவமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தன்னார்வத் தொண்டினை புரிவதற்கு முன்வந்த விண்ணப்பதாரிகள் வழங்கிய விண்ணப்பத்தின் அடிப்படையில் அன்றைய தினம் நேர்முகப் பரீட்சைக்கு வருகை தரவும்.

நேர்முகப் பரீட்சைக்கு வரும் போது கிராம உத்தியோகத்தரின் நற்சான்றிதழ் மற்றும் சுயவிபரக் கோவை என்பவற்றைக் கொண்டு வரும்படி யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். (4-5)

# வேகக் கட்டுப்பாட்டுத் தடை அமைக்குமாறு கோரிக்கை

(கரணவாய்)

வல்லை முனியப்பர் கோயிலுக்கு முன்னால் வேகக் கட்டுப்பாட்டு தடையை வீதியில் அமைக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வல்லை முனியப்பர் கோயில் ஆஞ்சநேயர் ஆலயம், பாபா ஆலய வழிபாடு மற்றும் பழக்கடைகள் என மக்கள் கூட்டம் அதிகம் உள்ள இடங்கள் காணப்படுகின்றன.

இந்நிலையில் அவ் வீதியால் செல்லும் வாகனங்கள் மிக வேகமாக செல்கின்றன.

இதனால் அப்பகுதியில் விபத்து ஏற்படும் அபாயம் இருப்பதனால் வேகக் கட்டுப்பாட்டுத் தடையை வீதியில் அமைக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-5-60)



யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடத்திய பேச்சுப் போட்டி கடந்த 5 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறை மண்டபத்தில் நடைபெற்றது. போட்டியில் வடபுல பாடசாலைகளைச் சார்ந்த 15 மாணவர்களுக்கு இறுதிப் போட்டி நடைபெற்றது. (படம்:-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை விதிமுறைகளை மீறினால் வாழ்நாள் தடை விதிக்கப்படும்

## பரீட்சைத் திணைக்களம்

**(கொழும்பு)**

**பரீட்சை விதிமுறைகளை மீறிச் செயற்படும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை எழுதுவதற்கு வாழ்நாள் தடை விதிக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.**

அதேநேரம் பரீட்சை வினாத்தாள்களை சமூக வலைத்தளங்களில் வெளியிடுவது தடை செய்யப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொவிட் -19 தொற்றினால் பிற்போடப்பட்ட கல்வி பொருளாதார உயர்தரப் பரீட்சைகள் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# 3 தடுப்பூசிகளையும் பெற்றவர்கள் மட்டுமே பொதுப் போக்குவரத்தில் பயணிக்க முடியும்?

(கொழும்பு)

பொதுப்போக்குவரத்தை பயன்படுத்தும்போது தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர், சுகாதாரத் துறையிலிருந்து சுற்றறிக்கை அல்லது விழிப்புணர்வை மேற்கொண்டால், மூன்று தடுப்பூசிகளையும் பெற்றவர்கள் மட்டுமே பொதுப் போக்குவரத்தில் பயணிக்க வேண்டும் என்ற வழிமுறையை கடைப்பிடிக்க நேரிடும் என தெரிவித்தார்.

ஏனெனில் இது ஒரு தொற்றுநோய் என்றும் அந்த நிலைமை தொடர்பான முடிவுகளை சுகாதார அமைச்சே எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, இவர்கள் தான் பொதுப் போக்குவரத்தில் பயணிக்க வேண்டும் என்று அவர்கள் தமக்கு அறிவுறுத்தல் வழங்கினால், அந்த வழிமுறைக்கு ஏற்றாற்போல் மாற வேண்டி ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-5)

# நெடுஞ்சாலை விபத்துகள்

## 2020 ஆம் ஆண்டை விட 2021 ஆம் ஆண்டில் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாகவும் 2020 ஆம் ஆண்டை விட 2021 ஆம் ஆண்டு வீதி விபத்துக்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து காணப்பட்டதாகவும் ஆளும் தரப்பு பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதிவேக நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களை ஆறு மாதங்களுக்குள் தடுப்பதற்குத்தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிந்தக குணரத்னவிடம் பணிப்புரை விடுத்தார். (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மகம் 1கி.பா: செவ் 4 சூரி 8இல்
உயரம்: 165 cm
தகைமை/தொழில்:பாடசாலை விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/12258

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: ரேவதி 1
கி.பா: $17\frac{1}{2}$ செவ் 5 சூரி 3 இல் உயரம்:5'4"
தகைமை/தொழில்:Export Cement (Exporter)
எதிர்பார்ப்பு : தகுதியான வரன்
தொ.இ: B/12259

பிறப்பு: 1987 கிறிஸ்தவம் RC
நட்சத்திரம்: ரோகினி 4
கி.பா: செவ் 5 சூரி 3 இல் உயரம்:5'8"
தகைமை/தொழில்: BSc computer science Software Engineer(Doha)
எதிர்பார்ப்பு: பட்டதாரி உத்தியோகம்
தொ.இ: B/12260

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா: $43\frac{1}{2}$ சூரி 5 செவ் 4 இல்
தகைமை/தொழில்:நாதஸ்வர வித்துவான்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ:B/12262

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 3
கி.பா: $32\frac{1}{2}$ செவ் 3 சூரி 1 உயரம்:155 cm
தகைமை/தொழில்:BSc பல்கலைக்கழக DOM
எதிர்பார்ப்பு:தகுந்த அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: G/12384

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 4
கி.பா: 34 சூரி.செவ் 12 இல்
உயரம்: 154 cm
தகைமை/தொழில்:ஆசிரியர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/12385

பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்:மூலம் 3
கி.பா:21 சூரி.செவ் 5 இல் உயரம்:5'6"
தகைமை/தொழில்:Bio Science
எதிர்பார்ப்பு : பட்டதாரி
தொ.இ:G/12387

பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: $13\frac{1}{4}$ சூரி 4 செவ் 3 இல் உயரம்:5'1"
தகைமை/தொழில்: BA முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: தகுந்த அரச,தனியார் உத்தியோகம் உள்நாடு மட்டும்
தொ.இ:G/12391

**கல்யாணமாலை**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## மீள் கேள்வி அறிவித்தல்

தலைவர், பெறுகைக் குழு, சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் பின்வரும் சேவைகளுக்காக 01.03.2022 தொடக்கம் 31.12.2022 வரையான காலப்பகுதிக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

பெறுகையின் பெயர். இல:-

**1.பொன்விழா மண்டப நிகழ்வுகளிற்கு உணவு வழங்குநரை தெரிவு செய்தல் - NP/14/41(3)/Town Hall/Food Supply/2022**

**பொன்விழா மண்டப நிகழ்வுகளிற்கு உணவு வழங்குநரை தெரிவு செய்தல்**

**நிபந்தனைகள் :-**

1. உணவு வழங்குநர் வியாபாரப் பதிவு செய்திருப்பதுடன் வியாபார உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் சமையல் செய்து வழங்கும் பகுதியானது நகராட்சி மன்ற எல்லைக்குள் காணப்படல் வேண்டும்.
2. தாங்கள் உணவு தயாரிக்கும் மற்றும் களஞ்சியப்படுத்தும் இடத்தினை எமது பொதுச் சுகாதார பரிசோதகர் அல்லது எம்மால் அனுமதியளிக்கப்படுகின்ற உத்தியோகத்தர் பார்வையிடுவதற்கு அனுமதியளிக்க வேண்டும்.
3. சமையல் செய்யும் பகுதி மற்றும் சமையல் மேற்கொள்பவர்கள் சுத்தமாக இருப்பதுடன் சமையல் மேற்கொள்பவர்கள் மருத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
4. தங்களால் வழங்கப்படும் உணவு வகைகள் அனைத்தும் நகராட்சி மன்ற பொதுச் சுகாதார பரிசோதகரின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.
5. தங்களால் தயாரிக்கப்படும் உணவு வகைகள் தொடர்ச்சியாக எப்போதும் சுவை மிக்கதாகவும் தரமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.
6. எங்கள் பணிப்பிற்கிணங்க எந்த உணவு வகைகளையும் வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
7. உரிய நேரத்திற்கு உணவு வகைகள் யாவற்றையும் தயாரித்து வழங்குதல் வேண்டும்.
8. தொழிற் தகைமை மற்றும் அனுபவச் சான்றிதழ்கள் இணைக்கப்படல் வேண்டும்.
9. தங்களிற்கு எமது மன்றத்தினால் வழங்கப்படும் உணவுக்கான கொடுப்பனவுத் தொகையிலிருந்து 5% தரகுப் பணமாக எம்மால் அறவிடப்படும்.
10. தாங்கள் பொன்விழா மண்டப நிகழ்வு ஏற்பாட்டாளர்களுடன் நிகழ்விற்கு உணவு வழங்குதல் தொடர்பாக நகராட்சி மன்றத்தினூடாக மட்டுமே தொடர்புகளை மேற்கொள்வதுடன் எம்மால் குறிப்பிடப்படும் உணவு வகைகள் மற்றும் அளவுகள் மட்டுமே விநியோகம் செய்தல் வேண்டும்.

**குறிப்பு :-**

1. சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் கேள்விப் பத்திரங்களை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கூறுவிலைப் பத்திரங்களை 08.02.2022 ஆம் திகதி மு.ப. 09:30 இலிருந்து 21.02.2022 ஆம் திகதி பி.ப.03:00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூ 1,000.00 இனைச் செலுத்தி அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நகராட்சி மன்றத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.
3. கூறு விலைகள் 22.02.2022 மு.ப. 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **"தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி"** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப் பட்டிருக்கும் கூறுவிலைப் பெட்டியில் இடப்படுதல் வேண்டும்.
4. கூறுவிலை உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை இல.எழுதப்படல் வேண்டும்.
5. கூறுவிலைகள் 22.02.2022 ஆம் திகதி மு.ப. 02.00 மணிக்குத் திறக்கப்படும். அத் தருணம் வழங்குநரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
6. தெரிவு செய்யப்படும் வழங்குநர்கள் சபையுடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.
7. கேள்வி தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை நகராட்சி மன்ற பெறுகைக் குழுவுக்கே உரியது.
8. மேலதிக விபரங்களுக்கு நேரடியாகவோ அல்லது தொ.பே.இலக்கம் 021-227 0963 மூலமோ தொடர்பு கொள்ளவும்.

**திருமதி. சிவமங்கை இராமநாதன்,**
**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**
**08.02.2022**

(C-3725)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கமிலாவிற்கு ராணி அந்தஸ்து வழங்க எலிசபெத் மகாராணி விருப்பம்





(லண்டன்)
கமிலாவுக்கு ராணி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என விரும்புவதாக எலிசபெத் மகாராணி தெரிவித்தார்.


எலிசபெத் மகாராணி முடி சூடி 70 ஆவது வருட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு அமைய எதிர்காலத்தில் அவர் 'கமிலா மகாராணி' என அழைக்கப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மகாராணியாரின் விருப்பம் குறித்து வெளியான தகவல் அரச குடும்பத்தை பெரும் மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளதாகப் பிரித்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எலிசபெத் மகாராணி 1952 ஆம் ஆண்டு முடி சூடியமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# உலகின் புகழ் பெற்ற தலைவர்கள் பட்டியலில் மோடிக்கு மீண்டும் முதலிடம்




(டில்லி)
உலகின் புகழ் பெற்ற தலைவர்கள் பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன், இங்கிலாந்து பிரதமர் பொரிஸ் ஜோன்சன் போன்ற முக்கிய உலகத் தலைவர்களை பின் தள்ளி இந்திய பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார்.

அமெரிக்க ஆராய்ச்சி நிறுவனமான Morning Consult வெளியிட்ட உலகளாவிய தலைவர்களின் தரவரிசைப் பட்டியலிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் 13 உலகத் தலைவர்களின் பட்டியலில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் 41 சதவீத மதிப்பீட்டில் ஆறாவது இடத்தில் உள்ளார்.

அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் 41 சதவீதத்துடன் எட்டாவது இடத்தையும், கனடா பிரதமர் ஜஸ்டின் ரூடே இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளனர். (நி-5)

# இந்தோனேசியாவில் பேருந்து விபத்து 13 பேர் பலி; 34 பேர் காயம்



(ஜகார்த்தா)
இந்தோனேசியாவின் ஜகார்த்தா மாகாணத்தில் பயணிகள் பேருந்து குன்று ஒன்றின் மீது மோதி இடம் பெற்ற விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர். மேலும் 34 பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இந்த விபத்து நிகழ்ந்தது.

விபத்துக்குள்ளான பேருந்தில் மொத்தம் 50 வரையான பயணிகள் இருந்தனர்.

ஜாவா தீவின் தெற்கு கடற்கரையில் உள்ள பராங்ட்ரிடிஸ் சுற்றுலா தலத்திற்கு அவர்கள் சென்றுகொண்டிருந்த போது விபத்து நிகழ்ந்ததாக பொலிஸ் தலைமை அதிகாரி தெரிவித்தார். (நி-5)

# கொரோனா கட்டுப்பாடுகளை எதிர்த்து கனடா முழுவதும் போராட்டம்



(ஒட்டாவா)
கொரோனா கட்டுப்பாடுகள் மற்றும் கட்டாய தடுப்பூசி நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்து ஆயிரக்கணக்கான மக்கள் கனடா முழுவதிலும் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒட்டாவாவில் சுமார் 5,000 பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்றும் கனடாவின் மிகப்பெரிய நகரமான ரொறன்டோவிலும் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.


கனரக வாகன ஓட்டுநர்கள் கட்டாயம் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் என்ற விதிமுறையை எதிர்த்து, சுதந்திர வாகன அணிவகுப்பு என்ற அமைப்பு போராட்டத்தை தொடங்கியது.

போராட்டத்துக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வருவதையடுத்து, தற்போது 1000 இற்கு மேற்பட்ட கனரக வாகன ஓட்டுநர்கள் வாகனங்களுடன் போராட்டதை நடத்தி வருகிறார்கள்.

கடந்த எட்டு நாட்களாக குறித்த போராட்டம் இடம்பெற்று வருகின்ற நிலையில் ஒட்டாவாவின் நகரை முற்றுகையிட்டு நேற்று முன்தினம் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த போராட்டத்தின் போது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கனேடியக் கொடியை அசைத்து, அரசாங்கத்திற்கு எதிரான கோஷங்களை எழுப்பியிருந்தனர். (நி-5)

# மனதை கவரும் பனிக்கட்டி உணவகம் சுற்றுலா பயணிகளிடையே வரவேற்பு



(கொழும்பு)
இந்தியா முழுவதும் கொரோனா பாதிப்பு படிப்படியாக குறைவடைந்துள்ளமை காரணமாக சுற்றுலா தலங்களில் கூட்டம் அதிகரிக்க தொடங்கியுள்ளது.

குளிர்காலம் என்பதால் காஷ்மீர் பனி போர்த்தப்பட்டு ரம்மியமாக காட்சி அளிக்கின்றது.

அதுவும் முக்கிய இடமான குல்மார்கில் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் உணவகம் திறக்கப்பட்டுள்ளது.

இக்லூ எனப்படும் பனியால் கட்டப்படும் வீட்டை போல உணவகம் திறக்கப்பட்டுள்ளது.

ஆர்க்டிக் பகுதிகளில் வாழ்கிற எஸ்கிமோக்கள் இவ்வாறான வீடுகளை கட்டி வாழ்வார்கள்.

வெளியே எவ்வளவு குளிராக இருந்தாலும் இக்லூ வீடுகளில் வெதுவெதுப்பான சீதோஷ்ணம் நிலவும் என்பதுதான் இதன் சிறப்பம்சம். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளைச்சலின் ஒரு பகுதியை பகிர்ந்தளித்த விவசாயி



(தருமபுரம்)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் கிழக்கைச் சேர்ந்த இராஜரட்ணம் இராஜேந்திரம் என்ற விவசாயி 20 இற்கு மேற்பட்ட ஏக்கரில் நெற் செய்கை மேற்கொண்டு வருகின்றார்.

கடந்த எட்டு வருடங்களாக தனக்கு கிடைக்கும் விளைச்சலின் ஒரு பகுதியை தனது கிராமத்தில் விவசாய செய்யை மேற்கொள்ள முடியாத நிலையிலுள்ள வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு வழங்கி வருபவர்.

இம்முறை கூட பசளை, கிருமிநாசினி இன்மையால் தனது விளைச்சல் குறைவடைந்த நிலையிலும் தான் வழமையாக கொடுக்கும் ஒரு பகுதியை இம்முறையும் கொடுத்துள்ளார்.

அந்த வகையில் நேற்று முன்தினம் 35 குடும்பங்களை தெரிவு செய்து அவர்களுக்கு ஒரு பை நெல்லை தனது வீட்டில் வைத்து வழங்கினார். (4-5-316)

# விபத்துக்களை தவிர்க்க வீதியோர மரங்கள் அகற்றப்பட வேண்டும்

## பூநகரி பிரதேச சபை தவிசாளர்

(அக்கராயன்)

கிளிநொச்சி ஏ-32 வீதியின் இரு மருங்கிலும் விபத்துகள் ஏற்படக் கூடிய வகையில் உள்ள மரங்களை அகற்ற வேண்டும் என பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பூநகரி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட ஏ-32 வீதியில் அமைந்துள்ள ஆபத்தான நிலையில் காணப்படும் மரங்களை அகற்றும் வேலைத் திட்டத்துக்காக மரங்களை அடையாளப்படுத்தும் வேலைகள் எமது உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனம் என்பன இணைந்து இவ் வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு முன்வந்துள்ளன.



எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பேராபத்தை தவிர்க்கும் பொருட்டு இவ் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இறுதியாக நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இவ்விடயம் சுட்டிக் காட்டப்பட்டது.

64 மரங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. இவற்றில் 06 மரங்கள் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. அழிந்த மரங்களை அகற்றி ஏனைய மரங்களின் கிளைகளை அகற்றுவதன் மூலம் ஏ-32 சாலையில் ஏற்படக் கூடிய விபத்துகளையும் தவிர்க்கலாம்.

அதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (4-5-350)

# கசிப்புடன் ஒருவர் கைது

(அரலாலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 32 வயதுடைய நபர் ஒருவர் 35 லீட்டர் கசிப்புடன் நேற்று கைது செய்யப்பட்டார்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வட்டுக்கோட்டை பொலிஸாரும் இராணுவ புலனாய்வு பிரிவினரும் இணைந்து இக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணங்களும் மீட்கப்பட்டன. குறித்த சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-104)

# பூசகரை கடத்தி நகை கொள்ளை

(கரணவாய்)

பூசகர் ஒருவரை கடத்திச் சென்று அவரிடம் இருந்த நகைகளை கொள்ளையிட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்பளை பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வீதியோரமாக நின்ற பூசகரை கடத்திச் சென்று அவரிடம் இருந்த ஒன்றரை பவுண் தங்க சங்கிலி மற்றும் மோதிரம் என்பன கொள்ளையிடப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் நேற்று திங்கட்கிழமை சந்தேக நபர் ஒருவரை கைது செய்தனர்.

மேலும் சிலர் தலைமறைவாகி உள்ள நிலையில் அவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (4-5-60)

# இரணைமடு குளத்தில் மணல் அகழ்வு கட்டுப்படுத்த தவறும் பொலிஸார்

## பிரதேச சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

(முறிகண்டி)

சாராய கடத்தல்களை கண்டறிந்து தண்டனை கொடுக்கும் பொலிஸார் கனரக வாகனங்களில் மண்ணகழ்வதை கண்டு கொள்வதில்லை என கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவராசா தெரிவித்தார்.

கிளிநொச்சி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்திற்கு மிக முக்கியமான குளமாகவும், விவசாயக் குளமாகவும் காணப்படும் இரணைமடு குளத்தில் அதிகளவில் மண்ணகழ்வு இடம்பெற்று வருகிறது. குறித்த மண்ணகழ்வைத் தடுப்பதற்கு பொலிஸார் முனைப்பு காட்டுவதாக தெரியவில்லை.

கனரக வாகனங்களில் வெளி மாவட்டங்களிற்கு மணல் ஏற்றிச் செல்லப்படுகின்றது. இதனை கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் இரணைமடு குளம் முழுமையாக அழிவடைந்துவிடும்.

சாதாரணமாக சாராயம் கடத்தப்படுவது தொடர்பில் பொலிஸார் கைது நடவடிக்கைகளை மேற்கொண்டு சட்டத்தின் முன் நிறுத்துகின்றனர்.

ஆனால் இவ்வாறான பாரிய மண் கொள்ளை இடம்பெறும் நிலையில் அதனை கட்டுப்படுத்த தவறுகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தி, இராணுவத்தினர் ஊடாக முழுமையாக கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (4-5-00-316)

# வெட்டுக் காயங்களுடன் குடும்பஸ்தர் மருத்துவமனையில் அனுமதிப்பு

(குருமன்காடு)

செட்டிகுளம் பகுதியில் தலையில் வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா, செட்டிகுளம், கங்கன்குளம் பகுதியில் நேற்று அதிகாலை குறித்த குடும்பஸ்தர் மீட்கப்பட்டு நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

செட்டிகுளம், கங்கன்குளம் பகுதியில் உள்ள தனது வீட்டில் இருந்து நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் சண்முகபுரம் நோக்கிச் சென்ற இளம் குடும்பஸ்தர் இரவாகியும் வீடு திரும்பவில்லை.

இந்நிலையில் அதிகாலை ஒரு மணியளவில் கங்கன்குளம் சந்திப் பகுதியில் தலையில் வெட்டுக்காயங்களுடன் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் குறித்த குடும்பஸ்தர் வீதியில் கிடப்பதாக அவரது மனைவிக்கு கிடைத்த தகவலையடுத்து அப் பகுதி மக்களின் துணையுடன் நோயாளர் காவு வண்டி மூலம் குறித்த நபர் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-5-250)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கிளிநொச்சி உப அலுவலகத்தில் வார நாட்கள் முழுவதும் சேவை

(தருமபுரம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் கீழ் இயங்குகின்ற கிளிநொச்சி உப அலுவலகத்தின் பணிகள் நேற்று முதல் வார நாட்கள் முழுவதும் முன்னெடுக்கப்பட்டுள்ளது என யாழ்.பிராந்திய அலுவலகத்தின் இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

கிளிநொச்சி ஏ-9 பிரதான வீதியில் பழைய கச்சேரி வளாகத்தில் இயங்குகின்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உப அலுவலகத்திற்கு இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே வார நாட்கள் அனைத்தும் அலுவலக நேரங்களில் பொது மக்கள் தங்களது சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (4-5-316)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யோக்கட் விலையிலும் மாற்றம்

(கொழும்பு)

நாட்டில் இனிவரும் நாட்களில் யோக்கட் ஒன்றின் விலை 55-60 ரூபாய்வரை அதிகரிக்க நேரிடும் என இலங்கை பால் சங்கத்தின் உப தலைவர் மஞ்சுள நிஷாந்த தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக எதிர்வரும் நாட்களில் இந்த நிலைமை ஏற்படும் என அவர் குறிப்பிட்டார்.

பால் தட்டுப்பாடு மற்றும் மூலப்பொருட்களின் விலை உயர்வு ஆகியவற்றால் யோக்கட் தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்தப் பிரச்சினையில் அரசாங்கம் தலையிட்டு தீர்வு காண வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# வலம்புரிச் சங்குகளுடன் ஒருவர் கைது

(மட்டக்களப்பு)

ஒரு கோடி ரூபாவிற்கும் அதிக பெறுமதி கொண்ட இரண்டு வலம்புரிச்சங்குகளை சட்டவிரோதமாக விற்பனை செய்வதற்காக வைத்திருந்த நபர் ஒருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெய்தல் நகர் பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது வாழைச்சேனை, களவாஞ்சிக்குடி முகாமில் இருந்து விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, வலம்புரிச் சங்கை விற்பனை செய்வதற்கு தயாரான நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளுக்காக அவர் மூதூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## சகல செல்வங்கள் அருளும் கிருஷ்ண ஜெயந்தி



காக்கும் கடவுள் மகாவிஷ்ணு. அவர் பக்தர்களை காக்கும் பொருட்டு பல அவதாரங்களை எடுத்துள்ளார். மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன், ராமன், பலராமன், கிருஷ்ணன் போன்ற அவதாரங்களை இப்பூமியில் மகாவிஷ்ணு எடுத்துள்ளார். ஒன்பது அவதாரங்களின் ராமாவதாரமும், கிருஷ்ணாவதாரமும் பரிபூரண அவதாரங்கள். மனிதன் எப்படி வாழ வேண்டும் என வாழ்ந்து காட்டியது ராமாவதாரம், அதை சொல்லிக்காட்டியது கிருஷ்ணாவதாரம். துவாபரயுகத்தின் முடிவில் பூமியில் அதர்மம் தலை விரித்தாடியது. அதனால் மனிதர்களிடம் பக்தியில் பக்தி குறைந்தது. பூமாதேவிக்கு பாவச்சுமைகள் அதிகரித்தன. தர்மத்தை நிலைநாட்ட பரந்தாமன் பூமியில் அவதரிக்க முடிவு செய்தார்.

ஆவணி மாதம் அஷ்டமி திதியுடன் கூடிய ரோகிணி நட்சத்திரத்தில் நள்ளிரவில் சிறைச்சாலையில் தேவகி, வசுதேவருக்கு மைந்தனாக கிருஷ்ணன் பிறந்தார். கிருஷ்ண பரமாத்மா அவதரித்த இந்த நாளை கிருஷ்ண ஜெயந்தி என்றும் கோகுலாஷ்டமி என்றும் கொண்டாடி வருகிறோம். நான்கு திருக்கரங்களுடன் பிறந்த கண்ணன், நான்கு வேதங்களுக்கும் நாயகனாக விளங்குகின்றான். வடநாட்டில் இந்த விழாவை விமரிசையாக கொண்டாடி மகிழ்கின்றனர். தென்னாட்டில் நவராத்திரி விழா போல கண்ணனின் லீலைகளை பொம்மைகளாக கொண்டு அலங்காரம் செய்து வீதிக்கு வீதி பஜனையும், பாட்டுமாக சிறப்பாக உற்சாகமாக கொண்டாடுகிறார்கள். பிருந்தாவனம், துவாரகை, பண்டரிபுரம் ஆகிய இடங்களில் கிருஷ்ண ஜெயந்தி பெரிய திருவிழாவாக நடத்தப்படும்.

### அவதார வரலாறு

யாதவர்களின் அரசனாக விளங்கியவர் உக்கிர சேனன். இவனுக்கு கம்சன் என்ற மகனும், தேவகி என்ற மகளும் இருந்தனர். வசுதேவர் உக்கிர சேனனுக்கு மந்திரியாக இருந்தார். வசுதேவருக்கு தேவகியை திருமணம் செய்து வைத்தனர். தேவகிக்கு பிறக்கும் 8 ஆவது குழந்தையினால் கம்சனுக்கு முடிவு ஏற்படும் என்று ஜோதிடர்கள் கூறினார்கள். இதனால் அச்சமுற்ற கம்சன் தேவகிக்கு பிறந்த 7 குழந்தைகளையும் கொன்று விடுகிறான். 8 ஆவது குழந்தையாக கிருஷ்ணன் பிறந்தான். இக்குழந்தைக்கும் கம்சனால் ஆபத்து ஏற்பட்டு விடுமோன என்று தேவகியும், வசுதேவரும் பயந்தனர்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## உயர்தர பரீட்சைக்கு தோற்றியுள்ள மூன்று கைதிகள்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் மூவர் நேற்று ஆரம்பமான க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றியதாக சிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது. (நி-5)

## ஹர்ஷன ராஜகருணாவுக்கு கொரோனா

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜ கருணாவுக்கு கொவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து அவர் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைய நாட்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு கொவிட் தொற்று உறுதியாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## 60 கிலோ மான் இறைச்சி, துப்பாக்கிகளுடன் 3 பேர் கைது

(கொழும்பு)

தெல்தெனிய - ரங்கல - கலபடவத்த பிரதேசத்தில் கப்ரக வாகனம் ஒன்றில் மான் இறைச்சி மற்றும் துப்பாக்கிகளை கொண்டு சென்ற இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைதாகியுள்ளனர்.

இதன்போது 60 கிலோ மான் இறைச்சி, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 2 துப்பாக்கிகள் உட்பட 3 துப்பாக்கிகள், தோட்டாக்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 500 |
| தக்காளி | 130 | 140 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 90 | 60 |
| கோவா | 200 | 240 | 250 |
| கரட் | 440 | 480 | 600 |
| பூசணி | 150 | 150 | 200 |
| புடோல் | 250 | 240 | 200 |
| வாழைக்காய் | 30 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-250 | 400 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 180 |
| பாகற்காய் | 300 | 320 | 400 |
| வெண்டிக்காய் | 260 | 180 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 450 | 450 | 300 |
| லீக்ஸ் | 220 | 240 | 300 |
| பீற்றூட் | 300 | - | 300 |
| கறிமிளகாய் | 550 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 1200 |
| போஞ்சி | 200 | 240 | 320 |
| கத்தரிதம்புள்ள | 350 | 280 | 300 |
| கீரை - 1 பிடி | 70 | 60 | 80 |
| தேசிக்காய் | 150 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 180 | 200 |
| முள்ளங்கி | 60 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 50 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 25 | 40 |
| ஈரப்பலா | 110 | 80 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருந்துகளின் விலைக்கட்டுப்பாட்டை நீக்குமாறு

## மருந்து இறக்குமதியாளர் சங்கங்கள் கோரிக்கை

(கொழும்பு)

**மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான கடன் கடிதத்தைத் திறக்க டொலரை விடுவிக்க முடியாவிட்டால், மருந்துகளின் விலைக் கட்டுப்பாட்டை நீக்க வேண்டும் அல்லது குறைந்தபட்சம் 15% விலையை அதிகரிக்க வேண்டும் என்று மருந்து இறக்குமதியாளர் சங்கங்கள், அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளன.**



மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக கடன் கடிதங்களை திறக்க தேவையான டொலர்களை வழங்க முடியாது என வர்த்தக வங்கிகள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், மருந்து இறக்குமதியாளர்கள் கடும் அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ள நிலையிலேயே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையானது மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்கு முறை இராஜாங்க அமைச்சுடன் இணைந்து 2021 ஓகஸ்டில் மருந்துகளின் விலையை 9% உயர்த்த ஒப்புதல் அளித்துள்ளது.

இருப்பினும், அது அமெரிக்க டொலரின் மதிப்பு 176 ரூபாயாக இருந்த காலகட்டம் என்றும் இப்போது டொலர் மதிப்பு ரூ. 230 என்றும் இறக்குமதியாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மூலப்பொருட்களின் விலை அதிகரித்துள்ளதால், உள்ளூரில் பரசிட்டமோல் உற்பத்தி செய்வது கடினமாகி வருவதாக மருந்து உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய கட்டுப்பாட்டு விலையான ரூ.200 இற்கு மருந்து தயாரிக்க நிறுவனங்களால் முடியாததால், நாட்டில் பரசிட்டமோல் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (நி-5)

# சைபிரஸிடம் இருந்து எரிபொருள் கொள்வனவு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் சைபிரஸின் டெரா கேவிஸ் நிறுவனத்திடமிருந்து 450,000 பீப்பாய் மசகு எண்ணெய் கொள்வனவு செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த நிறுவனம் சமர்ப்பித்த விலை மனுக்கோரலின் அடிப்படையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் 78 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யவும் இணங்கியுள்ளது.

எரிபொருள் கொள்வனவிற்காக இலங்கைக்கு வருடாந்தம் 400 முதல் 500 ட்ரில்லியன் டொலர்கள் தேவைப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## சுற்றுலாப் பயணிகளுக்கான காப்புறுதி 7,500 அமெரிக்க டொலராக அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் சுற்றுலாப்பயணிகள் கொரோனா காப்புறுதியை பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில், அது 7,500 அமெரிக்க டொலர்கள் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் குறித்த காப்புறுதியானது 5,000 அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது.

நாட்டின் சுற்றுலா வலயத்திற்கு அருகில் பிரத்தியேகமானதொரு பொலிஸ் பிரிவு ஒன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், கல்கிசை மற்றும் உனவட்டுன பகுதியில் அதற்கான கட்டட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த மாதத்தில் மாத்திரம் 82,327 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-5)

## மைத்திரியை அரசாங்கம் பாதுகாக்கிறது

### அமைச்சர் சனத் நிஷாந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதியிடம் எவ்வித வாக்குமூலமும் பதிவு செய்யப்படவில்லை.

இந்நிலையில் பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்காதவர்களை அரசாங்கம் பாதுகாக்கிறதா என இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த கேள்வியெழுப்பியுள்ளார்.

பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்காததற்காக முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் அப்போது முப்படைகளின் தளபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து ஒரு வாக்குமூலம் கூட பதிவு செய்யப்படவில்லை என குற்றம் சாட்டினார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு எதிராக ஏதேனும் விமர்சனங்கள் இருந்தால், அவர்களும் இது குறித்து [illegible] வேண்டும் என சனத் நிஷாந்த தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### மகிழ வைத்து மகிழ்வோம்

சுற்றியிருப்போர் சோகமாய் இருக்க, அக்கும்பலின் நடுவே ஒருவன் மட்டும் வாய்விட்டுச் சிரித்துக்கொண்டிருந்தால் அவனை எந்த இரகத்தில் சேர்ப்பது?

சிரிக்கும்படியான சூழ்நிலை அங்கு நிலவ, தான் சிரிக்கக் காரணமாயிருந்த ஒன்றை எல்லோருடனும் பகிர்ந்து கொண்டு அனைவரையும் சிரிக்கவைப்பதுதானே முறையான செயல்.

உள்ளூர மகிழும் உள்ளத்தின் செயலும் இத்த இத்தகையதாகவே இருக்க வேண்டும்.

இன்னொரு வகையான மனிதர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மற்றவர்களை உறிஞ்சிக் கொழுப்பார்கள். அவர்களைச் சக்கையாக்கிப் பார்ப்பதில் இவர்களுக்கு ஒரு மகிழ்ச்சி.

நமக்கு ஏற்படக்கூடிய மகிழ்ச்சி இருக்கிறதே. அது மற்றவர்களின் சோகத்தில் உதித்ததாக இருக்கக்கூடாது. இது எப்படிச் சாத்தியம்? என்று வினவும் புத்திசாலிகளுக்கு என் வாதத்தைச் சற்றுத் தளர்த்திக் கொள்கிறேன். நம் முன்னேற்றம் காரணமாக எவ்வளவோ பேர் பின்தங்க நேரிடலாம். ஆனால் அவர்களைப் பின் தங்க வைக்க வேண்டும் என்பது நம் குறிக்கோளாக இருக்கக் கூடாது. இயல்பாக அவர்களுக்கு நட்டம் ஏற்பட்டால் ஏற்படட்டும். அதற்கு நீங்கள் நேரடிப் பொறுப்பாளி ஆகமாட்டீர்கள்.

நண்பர்கள், பெற்றோர்கள், உடன்பிறப்புகள், உறவினர்கள், தொழிலாளிகள் அல்லது முதலாளிகள், அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் ஆகியோர்தாம் நம் மகிழ்ச்சிக்கும் துன்பத்திற்கும் காரணமாக இருக்கிறார்கள்.

இவர்களை மகிழ்ச்சியாக வைத்திரா விட்டால், சுயநல உயர்வோடு கூடிய நம்முடைய மகிழ்ச்சியைக்கூட, ஜீரணிக்க முடியாதபடி இவர்கள் செய்து விடுவார்கள்.

தனக்குத் துன்பம் ஏற்படும்போது அதைப் பகிர்ந்துகொள்ள எவரும் முன்வரவில்லையே என்று ஊர் உலகத்தைத் திட்டித் தீர்க்கும் ஒருவன், தனக்கு ஏற்படும் மகிழ்ச்சியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளாமல் இருப்பது எந்த வகையில் நியாயம் எனப் புரியவில்லை.

மகிழ்ச்சியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதைக் காட்டிலும், மற்றவர்களை மகிழ்வித்து அதைக் கண்டு நீங்கள் மகிழும் தன்மை இருக்கின்றதே, அதுதான் மிகச்சிறந்த மகிழ்ச்சி, நிரந்தரமானது. உண்மையானதும் கூட.

"மற்றவர்களை மகிழ்வித்து, அதைக்கண்டு நான் மகிழ்வாதவது? எல்லோரையும் எல்லாக் காலத்திலும் மகிழ்ச்சியாக வைத்திருக்க முடியுமா? இதெல்லாம் கட்டுப்படியாகிற விடயமா?" ஆகிய கேள்விகள் இங்குச் சிந்திக்கத்தக்கவை.

சொல்லால் செயலால் பொருளால் ஆகிய மூன்று வழிகள் மூலம்தாம் மற்றவர்களுக்கு நாம் மகிழ்ச்சியை வழங்க முடியும்.

உங்களை நட்டப்படுத்திக் கொள்ளாமல், சொல்லால், செயலால் ஆகிய இருவகைகளிலாவது மற்றவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த முன்வரலாமே!

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## ஆமையும் மந்திரக்கோலும்


விலங்கினங்கள் காட்டை ஆட்சி செய்த அந்த காலத்தில் ஆமைக்கு பேசவும் தெரிந்திருந்தது. அப்போது ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தில் விலங்குகள் எல்லாம் சாப்பிடுவதற்கு எதுவும் கிடைக்காமல் பசியால் வாடின. ஆமையும் அப்போது மெலிந்து நோஞ்சான் ஆகிவிட்டது. முடிந்த அளவிற்கு பசியைத் தாங்கிக்கொண்டிருந்த சமயத்தில் எதுவும் தின்பதற்கு இல்லை என்ற நிலையும் வந்துவிட்டது. மற்ற விலங்குகள் எல்லாம் எங்கே உணவு கிடைக்கும் என்று தெரியாமல் தவித்தன.

ஆனால், ஆமைக்கு மட்டும் ஒரு வழி தெரிந்தது. வானத்தில் சிறகை அசைத்துப் பறக்கும் பறவையைப் பார்த்து, அதற்கு எப்படி உணவு கிடைக்கிறது என்று யோசித்துப் பார்த்தது. "பறக்கும் போது அதன் இறக்கைகளுக்கு அடியில் கொழுகொழுவென்று சதை போட்டிருக்கிறதே. எங்கேயோ போய் அது உணவைத் தின்றுவிடுகிறது. பறவையிடம் உணவு எங்கே இருக்கிறது என்று கேட்டுவிட வேண்டும்?" என்று முடிவு செய்தது ஆமை.

பறவையிடம் "நான் இங்கே சாப்பிட எதுவும் கிடைக்காமல் பசியாக இருக்கும் போது உனக்கு மட்டும் எங்கிருந்து உணவு கிடைக்கிறது?" என்று கேட்டது.

"ஐயோ! அதை நான் சொல்லவே மாட்டேன்" என்று மறுத்தது பறவை.

"இப்போது நீ சொல்லாவிட்டால், தனியாகப் போய் தின்றுவிட்டு



வருகிறாய் என்று காட்டில் உள்ள அனைவரிடமும் சொல்லிவிடுவேன்" என்று மிரட்டியது ஆமை.

வேறு வழியில்லாமல் உணவு எங்கே கிடைக்கும் என்று சொல்ல ஒப்புக் கொண்டது பறவை. ஆனால் அந்த இடத்தைப் பற்றி வேறு யாரிடமும் மூச்சுவிடக் கூடாது என்று நிபந்தனை போட்டது. அதை ஒப்புக்கொண்டது ஆமை.

உடவே பறவை தன் இறக்கையிலிருந்து சில இறகுகளை ஆமைக்குக் கொடுத்து தன்னுடன் பறந்துவரச் சொன்னது.

ஆமையும் பறவையும் பல ஆறுகளைக் கடந்து தொலை தூரத்திற்குப் பயணித்து நடுக் கடல் ஒன்றை அடைந்தன.

அங்கே தண்ணீர் தேவதை தோன்றினாள்.

ஆமையை அழைத்துவந்ததற்காக பறவை மீது கோபப்பட்ட தேவதை, அதன் உதவும் எண்ணத்திற்காக ஆமைக்கு ஒரு மந்திக் கோலைக் கொடுத்தாள்.

பின், இதை உன் குடும்பத்தினருக்கும் மட்டும்தான் பயன்படுத்த வேண்டும்," என்று ஆமையை எச்சரித்தாள் தேவதை.

(தொடரும்...)

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்




பொன்னொளி வீசிய பொற்புடைய தட்டில் அற்புதமான அமுதப்பிண்டம் இருந்தது. அந்தப் பிண்டத்தை அவர் அரசனுக்குத் தந்து நல் ஆசி கூறினார்.

தட்டில் இருந்த அமுதத்தைக் கட்டிய மனைவியர் மூவர்க்கும் பகிர்ந்து அளித்தான். தசரதன் எஞ்சியிருந்த மிச்சத்தை மீண்டும் இளையவள் சுமித்திரைக்குத் தந்து, அவளை இரட்டையர்க்குத் தாயாக்கினான்.

இலக்குவன் சத்துருக்கனன் சுமித்திரைக்குப் பிறந்தனர். கோசலைக்குக் கரிய செம்மலாகிய இராமனும், கைகேயிக்கு அரிய பண்பினன் ஆகிய பரதனும் பிறந்தனர். தசரதன் வாழ்வு மலர்ந்தது. எல்லாச் செல்வமும் அவனை வந்து அடைந்து மகிழ வைத்தன. மக்கட் செல்வம் அவனை மிக்கோன் ஆக்கியது.

**கல்வியும் பயிற்சியும்**

கட்டிளங்காளையர் நால்வரும் கலை பயில் தெளிவும், மலை நிகர்த்த ஆற்றலும், போர்ப் பயிற்சியும் பெற்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தனர். வசிட்டர் அவர்களுக்கு வேத சாத்திரங்களைப் பயிற்றுவித்தார். நூலறிவும் போர்ப் பயிற்சியும் மிக்கவர்களாய் வளர்ந்தனர். நாட்டாட்சி முறை கற்க, அவர்கள் மக்களோடு பழகினர்; அவர்கள் குறைகளை நேரில் கேட்டு அறிந்தனர்.

மாலை வேளைகளில் சாலை நிலைகளில் ஊர்ப்புறம் சென்று மக்களைச் சந்தித்தனர். உதயசூரியன் உதித்தது போல அவர்கள் அவனை மதித்துப் போற்றினர். செல்லும் இடம் எல்லாம் வெல்லும் திறனுடைய இளவல் இலக்குவன், இராமனைத் தொடர்ந்தான். அவ்வாறே பரதனைச் சத்துருக்கனன் நிழல் போல் தொடர்ந்தான்.

"தம்பி உள்ளான் படைக்கு அஞ்சான்" என்று கூறும்படி இலக்குவன் இராமனுக்கு அரணாக விளங்கினான். "உடன் பிறப்பு" என்பதற்கு இலக்கணம், இந்நால்வர் உறவில் விளக்கமுற அமைந்திருந்தது.

பாசம் அவர்களைப் பிணித்தது; மூத்தவன் இராமன் என்பதால் மற்றவர் அவனிடம் யாத்த அன்பும் பாசமும் காட்டி மதித்தனர். தலைமை இராமனிடம் இயல்பாக அமைந்து கிடந்தது. மக்களும் அவனை மற்றையவர்களைவிட மிகுதியாய் நேசித்தனர்.

**விசுவாமித்திரர் வருகை**

ஆற்றுவரியாக இயங்கிய தசரதன் வாழ்க்கை புயலையும் இடியையும் சந்திக்க நேர்ந்தது. மக்களைப் பெற்று மனை நலம் பெற்றிருந்த மன்னன், அவர்களைப் பிரியும் சூழல் உருவாகியது. விசுவாமித்திரர் "ராஜரிஷி" என்று பாராட்டப்படுபவர்; அவர் அரசராய் இருந்தவர்; அவர் தம் அரச பதவியை விலக்கிக் கொண்டு, தவ வேள்விகளைச் செய்து, உயர்பேறுகளைப் பெற்று வந்தார்.

வேகமும் விவேகமும் அவர் உடன் பிறப்புகள். சினமும் சீற்றமும் அவர் நாடித் துடிப்புகள், அவர் வருகையைக் கண்டாலே மாநில அரசர்கள் நடுங்கினர்; அடுத்து என்ன நேருமோ என்று அஞ்சினர்.

பீடுநடை நடந்து ஏற்றமும் தோற்றமும் தோன்றத் தன் அவைக்களம் அணுகிய அம்முனிவரைத் தசரதன் தக்க வழிபாடுகள் கூறி வரவேற்று அமர வைத்தான். "தாங்கள் எழுந்தருளியதற்கு நாங்கள் மிக்க தவம் செய்தோம்' என்று அடக்கமாய்ப் பேசி, அன்புடன் வரவேற்றான். இருகை வேழம் என விளங்கிய தசரதன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் வீரர்களுடையது என்பது சத்தியமான வார்த்தை. "வீரனாக இரு. எப்போதும் அச்சமில்லை அச்சமில்லை என்று சொல்லிக்கொள்."
- விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# குருந்தூர்மலையில் பிரித்(து) ஓதல்

முல்லைத்தீவு குருந்தூர்மலையில் ஏராளமான பௌத்த பிக்குகள் ஒன்றுகூடி பிரித் தோதியுள்ளனர்.

இரவிரவாக நடந்த இந்தப் பிரித்தோதல் நிகழ்வில் அமைச்சர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

தமிழர் தாயகத்தில் அடங்கக்கூடிய முல்லைத்தீவு குருந்தூர்மலையை பௌத்தர்கள் வாழ்ந்த இடமாகக் காட்டி, அதனை ஆக்கிரமிக்கும் நோக்குடனேயே இரவிரவாகப் பிரித்தோதல் நடந்துள்ளது.

என்ன செய்வது, அத்தனை புத்தபிக்குகளும் சேர்ந்து நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காகப் பிரித்தோத வேண்டிய நேரத்தில்,

அவர்கள் அதனைச் செய்யாமல், தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் செயலில் இறங்கியுள்ளனர்.

இன்றைய இலங்கையின் பொருளாதார நிலை குறித்து பொருளியலாளர்கள் பலரும் எச்சரிக்கை செய்து வருகின்றனர்.

இலங்கையின் சமகால நிலைமை தொடர்ந்து நீடிக்குமாயின், பஞ்சம் பசியில் இருந்து மக்களை மீட்க முடியாத பாரிய பொருளாதாரப் பிரச்சினையை நாடு எதிர்கொள்ளும் என்பது பொருளியலாளர்களின் எச்சரிக்கையாகவுள்ளது.

தவிர எரிபொருளின் விலையேற்றம், எரிவாயுவின் உயர் விலையும் தட்டுப்பாடும் மின் தடை என ஏகப்பட்ட பிரச்சினைகளை நாடு எதிர்கொள்ளும்போது, பௌத்த பிக்குகளோ நிலைமையை உணராமல்; குருந்தூர்மலையில் கூடிப் பிரித்தோதுகின்றனர்.

இவ்வாறு கடந்த காலங்களில் பிரித்(து) ஓதியதால்தான் மிகமோசமான பொருளாதாரப் பிரச்சினைக்கு இலங்கை ஆளாக வேண்டி ஏற்பட்டது.

ஆம், தமிழ் இனத்தை அழிக்கும் நோக்குடன் தமிழ் மக்களுக்கு எதிராகக் கொடும்போர் நீண்ட காலமாக நடத்தப்பட்டது.

வெளிநாடுகளில் இருந்து போராயுதங்களைக் கொள்வனவு செய்து, தனது நாட்டு மக்களைக் கொன்றொழித்த அந்தக் கொடுமை இப்போது இலங்கை மண்ணை வாட்டி வதைக்கிறது. ஆட்சியாளர்களை நிலைகுலைய வைத்துள்ளது.

யுத்தக் கொடுமையால் தமிழ் மக்கள் அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் இன்று இலங்கையின் செல்வத்தைத் தேய்க்கும் பெரும் படையாக எழுந்து நிற்கிறது.

தவிர, சீனாவும் இந்தியாவும் இலங்கையைப் பிரித்தெடுத்து இது உனக்கு அது எனக்கு என்று உயில் எழுதிக் கொண்டிருக்கையில், இங்கோ பௌத்த பிக்குகள் முல்லைத்தீவு குருந்தூர்மலையில் ஒன்றுகூடி இரவிரவாகப் பிரித்தோதுகின்றனர் என்றால் இவர்களை எப்படித்தான் திருத்த முடியும்.

# மகிந்தவின் ஆட்சிக்குப் பின்னரே பொருளாதாரம் கேள்விக்குறியானது

## ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஸ்

(யாழ்ப்பாணம்)

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்துக்கு பின்னர்தான் நாட்டின் பொருளாதாரம் கேள்விக்குறியானது என ஈ.பி.ஆர்.எல்.எப் இன் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதாரம் கொரோனா காரணமாக பாதாளத்திற்கு சென்று விட்டது என சொல்கிறார்கள். அது உண்மை இல்லை. மகிந்த ராஜபக்சவின் ஆட்சியின் பின்னர்தான் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது.

மத்தள விமான நிலையம் முதல் அம்பாந்தோட்டை துறைமுகம் வரை திட்டமிடப்படாத நிகழ்ச்சி நிரலின் கீழ் சென்றுவிட்டது. இப்படித்தான் ஆட்சியாளர்கள் செய்துவிட்டு செல்கின்றனர்.

இப்போது மின்சாரம், எரிபொருள் எல்லாமே பிரச்சினையாக உள்ளது. பொருட்களின் விலையை வியாபாரிகளே நிர்ணயிக்கின்றனர். இதற்கு நிதி அமைச்சரே பதில் கூற வேண்டும். அடுத்த தேர்தல்தான் இதற்கு பதில் கூறவேண்டும். பசில் ராஜபக்ச பொருளாதார கொள்கையை மீண்டும் ஒருமுறை திரும்பி பார்க்க வேண்டும் என்றார். (ம-104)

# 10 - 13ஆம் திகதிவரை வடக்கில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் வியாழக்கிழமை (10.02.2022) முதல் ஞாயிற்றுக்கிழமை(13) வரை வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் மிதமான மழை கிடைக்க வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் புவியியல் துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் மீண்டும் மழைக்கு வாய்ப்புள்ளது.

எனவே, நெல் மற்றும் வெங்காய அறுவடைச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் விவசாயிகள் முன்கூட்டியே திட்டமிட்டு அறுவடைச் செயற்பாடுகளை மேற்கொள்ளுவது நன்மை பயக்கும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ம-18)

## ஏழாலைப் பகுதியில்

# ஐஸ் போதையுடன் சகோதரர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

ஏழாலைப் பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் 22 வயது, 29 வயதுகளையுடைய சகோதரர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சுன்னாகம் பொலிஸாரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து 3 கிராம் 58 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-18,33,104)

# வவுனியாவில் விபத்து; இருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா பம்பைமடுப்பகுதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற கோரவிபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி இரும்புக் கேடர்களை ஏற்றி வந்த கன்ரர் வாகனம் பம்பைமடு பகுதியில் சென்று கொண்டிருந்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் நின்ற மரத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

விபத்தின்போது வாகனத்தில் பலர் பயணித்திருந்த நிலையில் இருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் சிறு காயத்திற்குள்ளாகினர்.

விபத்து தொடர்பாக பூவசரங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-250,299)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## கடவுள் மீது நம்பிக்கை இருந்தால்

❖ கடவுள் மீது உங்களுக்கு நம்பிக்கை இருக்குமானால் இந்த உலகத்தில் உங்களுடையது என்று கருதுகின்ற எல்லாமே உண்மையில் அவருடையது என்று நம்புங்கள். மிகப்பெரிய பலவீனங்க்ள, சில வேளைகளில் மிகப்பெரிய நன்மையாகவும், சில நேரங்கள் மிகப்பெரிய வலிமையாகவும் வேடம் தரித்து வருகின்றன. நம்மை எதிர்பார்த்துச் சிலர் வாழ்கிறார்கள். நாம் ஒருவருக்கு நன்மை செய்ய முடியும் என்று எண்ணுவது பலவீனம். இதுவே நம்முடைய பற்றுகள் அனைத்துக்கும் பிறப்பிடம். இந்தப் பற்றின் மூலமே நமது துன்பங்கள் எல்லாம் வருகின்றன.

❖ இந்தப் பிரபஞ்சத்தில் ஒருவர் கூட நம்மை எதிர்பார்த்து வாழவில்லை என்பதை நாம் நம் மனதிற்கு எடுத்துக் கூற வேண்டும். ஒரு பிச்சைக்காரன் கூட நம் தானத்தை எதிர்பார்த்து வாழவில்லை. ஒரு ஜீவன் கூட நம் கருணையை எதிர்பார்த்து காத்திருக்கவில்லை. நம் உதவியை எதிர்பார்தது ஒரு உயிர்கூட வாழவில்லை. அனைவருக்கும் இயற்கையே உதவி செய்கிறது. நம்மைப் போல் லட்சக்கணக்கான மனிதர்கள் இல்லாவிட்டாலும் இயற்கை உதவிகொண்டு தான் இருக்கும். உங்களுக்காகவும், எனக்காகவும் இயற்கையின் போக்கு நிற்காது.

❖ பிறருக்கு உதவுவது என்புது நம்மை நாம் பயன்படுத்திக் கொள்வதற்காக நமக்குத் தரப்படுகின்ற மிகப்பெரும் பேறு.

❖ வாழ்கையில் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டிய மிகப்பெரிய பாடம் இது. இதை முழுமையாக அறிந்துகொண்டர் நாம் துயரடையவே மாட்டோம். சமுதாயத்தில் எங்கும் எவரோடும் சேர்ந்து வாழலாம். அதனால் தீங்கு நேராது. மனைவி, கணவன், வேலைக்காரர் பட்டாளம், அழகான வீடுகள் என்று நீ பெற்றிருக்கலாம். ஆனால் [illegible] ஆக வேண்டும் என்ற தேவையும் உலகிற்கு இல்லை என்ற [illegible] என்றால் இவற்றால் எனக்கு எந்தத் துன்பமும் வராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

72

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



மேலும் கல்வெட்டுகளில், விரல், தோரை போன்ற அளவுகளைச் சிற்பம் சமைத்தலுக்குப் பயன்படுத்தியமையையும் தமிழகத்தில் பொது வாக 24 விரல் நீளக்கோலே நிலைவு செய்யப்பட்டு, பல்லவர்களின் மாமல்லைக் குடை வரைக் கோயில்கள், இராசராசனின் தஞ்சைப்பெருங் கோயில், திருவண்ணாமலைக் கோயில் போன்ற பணிகள் வரை புழக்கத்தில் இருந்து உள்ளது. இன்றும் மரபு வழித்த பதிகள் அக் கோலையே பயன்படுத்துகின்றனர்.

கூவ நூலில், 'முழம்' என்ற அளவுடன், பூமிக்கு அடியில் தோண்டும் போது ஒவ்வொரு முழத் திற்கும் ஏற்ப, மண் தன்மை கொண்டும் நீரின் சிறப்புக் கொண்டும் பலன்களை சொல்லும் முறை தமிழர் எதையும் கூர்ந்து அளவிட்டுச்சிறப்புற்ற தன்மையைச் சிறப்பாக இயம்புகிறது

### ஆடையும் அளவையும்

பொருட்களின் பெருஞ் சிறப்பினை வெளிக் கொணர அடிப்படையாக அமைந்த நீட்டல் அளவைகள் இன்று ஆடைகளை அளத்தலுக்கு மிகுந்த அளவில் பயன்படக் காண்கிறோம். மீற்றர், முழம், அடி, கஜம் போன்ற பல அளவுகளில் அளக்கப்படுகின்றன.

இத்துணிகள் அளத்தலின் வளர்ச்சி கி.பி. 15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தக் கணக்கதிகாரத்தில் தெளிவாக இயம்பப்பட்டுள்ளது. 18 முழம் கொண்டது - 1 புடைவை, 8 புடைவை = 1 சாம்பு, 80 சாம்பு =1 கோடி, 2 கோடி அல்லது 4 வேட்டி = 1 மடி, 1 மடி, 1 கோடி = 2½ சவுக்களி.

தற்போதும் உடுத்தப்படும் வேட்டியின் அளவி னையும் முழம் என்றே குறிப்பிடும் நிலை இன்றும் மாறாத ஒன்று.

இவ்வாறு நீட்டல் அளவை சம்பந்தமாக தமிழ் நாட்டில் பழந் தமிழரின் நடைமுறை பற்றி முனை வர் கு.பகவதி எழுதிய "தமிழர் அளவைகள்" என்ற நூலில் இருந்தது. இதுபற்றி நாமும் தெரிந்து கொள்வதற்காக இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. பொதுவாக நூல்களில் அட்டவணையிடப்படும் வாய்ப்பாடுகள் 13,14 மற்றும் 15 இல் தரப்பட்டுள்ளன.

### பல்லவர் ஆட்சியில் நில அளவை

பல்லவர்கால அளவைகள் என்பவை பல்லவ நாட்டில் நிலவிய அளவை முறைகளைக் குறிக்கும். பல்லவர் ஆட்சிக்குட்பட்ட பரப்பில் நிலம் முழுவதும் செவ்வையாக அளவை பெற்று இருந்தது. நில அளவைக் கணக்குகளையும் வரி அளவை முத லிய கணக்குகளையும் சிற்றூர்- பேரூர் அரசியல் அலுவலாளர் வைத்திருந்தனர். ஒரு குறிப்பிட்ட நிலத்தை அளந்ததும் கள்ளியும் கல்லும் நட்டு எல்லை வகுத்தல் அக்காலப்பழக்கமாக இருந்தது. நீட்டல் அளவையில் கலப்பை, நிவர்த்தனம், பட்டிகா, பாடகம் என்னும் நான்கு அளவைகள் பல்லவர் ஆட்சியில் இருந்தன.

(1) இரண்டு எருதுகள் பூட்டப் பெற்ற ஒரு கலப்பையைக் கொண்டு குறிப்பிட்ட ஒரு நேரத்தில் ஒருவன் உழும் நிலத்தின் அளவு "கலப்பை" எனப்பட்டது. (2) ஒருவன் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் சுற்றி நடந்து புறப்பட்ட இடத்தை அடைந்தவுடன் அவனால் எல்லை கோலப்பட்ட நில அளவே நிவர்த்தனம் எனப்பட்டது.

பிற்காலத்தில் 200 சதுர முழம் கொண்ட நிலப்பரப்பே 'நிவர்த்தனம்' எனப் பெயர் பெற்றது. (3) பட்டிகா (பட்டி) என்பது ஆட்டை ஓர் இடத்தில் கட்டி அதன் கயிற்றின் உதவியால் சுற்றும் அளவை யுடைய நிலப்பகுதியை ஆகும். (4) பாடகம் என்பது 240 குழிகொண்ட நிலமாகும். பிற்காலப் பட்டயங் களிலும் கல்வெட்டுகளிலும் 'வேலி', 'குழி' என்பன அளவைகளாகக் காணப்பட்டன. குழி என்பது 144 சதுர அடி முதல் 576 சதுர அடிவரை நாட்டுக்கேற்ப வழங்கப்பெற்றது. நிருபதுங்கன் காலத்தில் ஒரு குழி 81 சதுர அடி அளவை உடையதாக இருந்தது.

இந்த அளவைகளோடு (1) நாலு சாண்கோல், (2) பன்னிருசாண் கோல், (3) பதினாறு சாண் கோல் முதலிய நீட்டல் அளவைகள் இருந்தன என்பதும் கல்வெட்டுகளால் அறியத்தகும் செய்தி யாகும். இத்தகைய நீட்டல் அளவைகள் கங்க நாட்டில் வரிசைக் கோல், கங்க கோல், பெருந்த கோல், மர்குந்தி கோல், சச்சவிகோல் எனப் பலவாறு வழங்கப்பெற்றன.

| அட்டவணை 13 | | நீட்டல் அளவை |
|---|---|---|
| 10 கோண் | = | 1 நுண்ணணு |
| 10 நுண்ணணு | = | 1 அணு |
| 8 அணு | = | 1 கதிர்த்துகள் |
| 8 கதிர்த்துகள் | = | 1 துசும்பு |
| 8 துசும்பு | = | 1 மயிர்நுனி |
| 8 மயிர்நுனி | = | 1 நுண்மணல் |
| 8 நுண்மணல் | = | 1 சிறு கடுகு |
| 8 சிறு கடுகு | = | 1 எள் |
| 8 எள் | = | 1 நெல் |
| 8 நெல் | = | 1 விரல் |
| 12 விரல் | = | 1 சாண் |
| 2 சாண் | = | 1 முழம் |
| 4 முழம் | = | 1 பாகம் |
| 6000 பாகம் | = | 1 காதம் |
| 4 காதம் | = | 1 யோசனை |

| அட்டவணை 14 | | வழியளவை |
|---|---|---|
| 8 தோரை(நெல்) | = | 1 விரல் |
| 12 விரல் | = | 1 சாண் |
| 2 சாண் | = | 1 முழம் |
| 4 முழம் | = | 1 பாகம்அல்லதுதண்டம் |
| 2000 தண்டம் | = | 1 குரோசம் 21/4மைல் |
| 4 குரோசம் | = | 1 யோசனை |
| 71/2 நாழிகைவழி | = | 1 காதம்(10மைல்) |
| 4840 சதுரயார் (கஜம்) | = | 1 ஏக்கர் |
| 436 குழி | = | 1 ஏக்கர் |
| 5 பர்லாங்கு | = | 1 கிலோமீட்டர் |
| 8 பர்லாங்கு | = | 1 மைல் |

நீட்டலளவை வழியளவை, நிலவளவை என இருவகைப் படுகிறது.

| அட்டவணை 15 | நிலஅளவை |
|---|---|
| 16சாண் | 1கோல் |
| 18கோல் | 1குழி |
| 100குழி | 1மா |
| 240குழி | 1பாடகம் |
| 20மா | 1வேலி |
| 40மரக்கால் | 1புட்டி |
| 1குழி | 100சதுரஅடி |
| 1மா | 100குழி |
| 1காணி | 4மா |
| 1வேலி | 7காணி (6.43ஏக்கர்) |
| 1நிலம் (ground) | 2400 சதுரஅடி |
| 1 சென்ட் | 435.6 சதுரஅடி |

### நிலத்தின் வகைகள்

தொல்தமிழர்களின் தன்னிச்சையான உணவு உற்பத்தி பெரும்பாலும் நிலம் சார்ந்ததாகவே அமைந்திருந்தது. அவர்கள் தங்களை உழுகுடி களாகவே அடையாளம் கண்டனர். வயல் வெளியில் அவர்களின் வாழ்வு அமைவு கொண் டது. உழுதல் அவர்களுக்கு உடலுழைப்பின் அருமையென கற்றுத்தந்தது.

உழுது உற்பத்தி செய்வதையே அவர்கள் நாகரிகமாகக் கருதினர். "செய்" என்றால் வயல் என்று பொருள். நிலத்தின் அதன் தன்மைக்கு ஏற்ப சொற்களில் குறிப்பிட்டுள்ளனர். வெவ்வேறு தன்மை கொண்ட நிலங்களைக் குறிக்கும் சொற்களின் பட்டியல் பின்வருமாறு. இவ் வகைப்படுத்தல் தற்போதும் தமிழ்நாட்டில் உள்ளது.

(1) ஆற்றுவைப்பு - ஆற்றின் ஒதுக்கத்தால் சாகுபடியாகும் நிலம், (2) அருக்கக் கொல்லை - ஆற்றோரத்தில் உள்ள நிலம், (3) படுகை - ஆற்றோரத்து நிலம், (4) கரைவழி - ஆற்றோர மான நிலம், (5) காற்புரவு - ஆற்றுப் பாய்ச்சல் நிலம், (6) வெளிவாய்ப்படுகை - ஆறு, குளங்களை அடுத்துப் புறம்பாக உள்ள நிலம், (7) இறைப்புப் பட்டரை - கிணற்றுப் பாய்ச்சலுள்ள நிலம், (8) ஏற்றப்பட்டரை - ஏற்றமிட்டு இறைக்கும் கிண ற்றைச் சூழ்ந்த நிலம், (9) தூர்வை - கிணற்றைச் சேர் ந்த நிலம்,

(10) ஆயக்கட்டு - ஒரு நீர் நிலையை ஆதாரமாகக்கொண்ட நிலம், (11) நன்செய்நிலம் - நீர்வளம் நிறைந்துள்ள நிலம், (12) புன்செய் நிலம் - வானம் பார்த்த நிலம், கொல்லை நிலம், (13) அளக்கர் திணை - கடலாற் சூழப்பட்ட நிலம், (14) வானம் பார்த்த நிலம் - மழைநீரால சாகுபடி செய்யப் படும் நிலம், (15) எரங்காடு - பருத்தி விளையும் புன்செய் நிலம், (16). நாற்றங்கால் - விதைகளை விதைத்து நாற்று பயிரிடும் நிலம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26 பேர்...

நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15,621 ஆக உயர்வடைந்துள்ளது. (ம)

## +1,298...

மேலும் 1,298 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கையின் மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 620,732 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## குளியலறை...

மேற்படி குடும்பஸ்தர் வீட்டில் தனியாக வசித்து வந்த நிலையில் சில தினங்களாக அவரின் நடமாட்டத்தை காணாத நிலையில் அயலவர்கள் அங்கு சென்று பார்த்த போது அவர் குளியலறைக்குள் சடலமாக காணப்பட்டுள்ளார்.

இதனைத்தொடர்ந்து வல்வெட்டிதுறை பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு அறிவித்தார். (ம-60)

## இளம்...

(வயது-33) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் தனது வீட்டில் இருந்து நேற்று முன்திம் ஞாயிற்றுக்கிழமை விடத்தல் தீவு கிராமத்திற்குச் சென்று விட்டு மீண்டும் தனது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

இந்த நிலையிலே குறித்த குடும்பஸ்தர் நேற்று திங்கட்கிழமை காலை குறித்த பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலத்திற்கு அருகில் இருந்து அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு வந்த அடம்பன் பொலிஸார் விபத்தா அல்லது கொலையா? என்பது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-285)

## மீனவர்...

உத்தியோகபூர்வ விஜயமாக இந்தியா சென்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது சர்ச்சைக்குரிய மீனவர்கள் பிரச்சினை, இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துதல், இருதரப்பு வர்த்தகம், முதலீட்டை ஊக்குவித்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து இருவரும் பேசினர்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உடனான சந்திப்பு ஆக்கபூர்வமாக இருந்தது என சந்திப்பைத் தொடர்ந்து ஜெய்சங்கர் டுவீட் செய்துள்ளார்.

இதேவேளை, மற்றொரு டுவீட்டில், இரு நாடுகளின் சுதந்திரம் மற்றும் இராஜதந்திர உறவுகளின் 75 ஆம் ஆண்டு நிறைவை இரு நாடுகளும் இணைந்து பொருத்தமான வழிமுறையில் கொண்டாடுவோம் எனவும் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே தனது இந்திய விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும் சந்தித்துப் பேச இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் திட்டமிட்டுள்ளார். (ம)

*(மேலும் ஒரு செய்தி உள்ளே)*

## சுங்கம்...

குவதற்காக, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச அவர்களது தலைமையிலான குழுவொன்றை நியமிக்கவும் ஜனாதிபதி அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்.

எதிர்வரும் உற்சவக்காலத்தின்போது, உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைத் தட்டுப்பாடின்றி பொது மக்கள் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று எடுத்துரைத்த ஜனாதிபதி அவர்கள், அதற்காக தற்போதிருந்தே உரிய திட்டமிடல்களை வகுக்குமாறு, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

தெரிவுசெய்யப்பட்ட சில அத்தியாவசியப் பொருட்களின் கொள்வனவுக்குச் சந்தர்ப்பம் வழங்குமாறும் இதன்போது, குறுகிய எண்ணங்களுடன் அதிகப்படியான பொருட்களை இறக்குமதி செய்வதற்கோ அல்லது பொருட்களைப் பதுக்கிவைப்பதற்கோ இடமளிக்கக்கூடாது என்றும் ஜனாதிபதி எடுத்துரைத்தார். (ம)

## பொது...

குவரத்துறையில், நடைமுறைகள் பின்பற்றப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

## மண்மேடு...

பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் மேலும் ஒருவர் காயமடைந்து, கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீடொன்றிற்கு பின்புறமாக இருந்த மண்மேடொன்றே இவ்வாறு சரிந்து வீழ்ந்ததில் குறித்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இவ் அனர்த்தம் தொடர்பான மேலதிக விசாரணை வத்தேகம பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ம)

## தென்மராட்சி...

துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிவில் உடையில் வந்த விசேட அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவரும் கொட்டனால் தாக்கப்பட்டு இன்னொருவருமாக இருவர் காயமடைந்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானவர் கையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சட்டவிரோத மதுபானம் விற்பனை செய்வதாக தெரிவித்தே தங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தாக்குதலுக்குள்ளானவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை துப்பாக்கிச் சூடு மேற்கொண்ட விசேட அதிரடிப்படையினரை கைது செய்த கொடிகாமம் பொலிஸார், நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

அவர்களை சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதவான் ச.இளங்கோவன் பிணையில் விடுவித்துள்ளார். (ம-30)

## பாரா...

அலுவல்கள் தொடர்பான குழுவில் இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

அதன்படி, 1969 ஆம் ஆண்டு இலக்கம் 1 ஆம் ஆண்டின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் மாகாண சபைகள் (முத்திரை வரி மாற்றம்) (திருத்தம்) சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் (திருத்தம்) வரைபு, தனி நபர் சுரங்கத் தடைச் சட்டம், நீதித்துறை (திருத்தம்) வரைபு, சிவில் நடைமுறைச் சட்டம் (திருத்தம்) மசோதா ஆகியவற்றின் இரண்டாம் வாசிப்பை மேற்படி நாட்களில் தொடரவும் முடிவு செய்யப்பட்டது.

2015 ஆம் ஆண்டின் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகாரசபைச் சட்டம் இலக்கம் 5 மற்றும் மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் (திருத்தம்) சட்டமூலத்தின் கீழ் இரண்டு ஒழுங்குமுறைகளின் இரண்டாம் வாசிப்பு இன்று முற்பகல் 11 மணிமுதல் மாலை 4.30 மணிவரை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அரசாங்கத்தின் காரியங்களைத் தொடர்ந்து, ஒருங்கிணைத்தல் சட்டமூலம் இரண்டாம் வாசிப்பின் பின்னர் சட்டவாக்க நிலைக்குழுவுக்கு மாற்றப்படவுள்ளது.

அதன்படி, இன்றுமுதல் வியாழன் வரை, வாய்மொழி விடைக்கான வினாக்களுக்கு காலை 10 மணிமுதல் 11 மணி வரை நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம)

### மெகா பவர்

திகதி 07/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1019
G 03 37 40 72 77
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 07679

### ஹந்தஹன (HANDAHANA)

சீட்டிழுப்பு திகதி 2022.02.07
சீட்டிழுப்பு இலக்கம் 012
கன்னி 21 40 55 57 கன்னி

### மஹஜன சம்பத

திகதி 2022/02/07
சீட்டிழுப்பு இலக்கம் 4671
K 2 1 6 8 6 8

### கொவிசெத

சீட்டிழுப்பு திகதி 07.02.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2966
U 11 23 24 29

### தன நிதானய

திகதி - 2022.02.07
சீட்டிழுப்பு இலக்கம் - 701
W 24 72 73 78

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு 1693 திகதி 2022.02.07
W 28 61 64 78

### அத கோடிபதி

திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1474
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2022.02.07
ரூ. 4,962,700/-
13 15 29 49 I

### சனிதா

திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.02.07
சீட்டிழுப்பு இல: 3809
ரூ. 4,059,820/-
07 42 55 60 Y

### ஜயோதா

சீட்டிழுப்பு வாரம் 1809
சீட்டிழுப்பு திகதி 07.02.2022
05 23 31 53 K
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 30,730,124/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1648
சீட்டிழுப்பு திகதி 07.02.2022
நிறம் ஊதா
தினம் திங்கள்
D 12 26 39 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 58,209,517/=

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,368,684/=
திகதி 07.02.2022
வெற்றி வாரம் 3360
வர்ணம் மஞ்சள்
27 34 45 55
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,386,800/=

### 12 லக்ன

I 12 25 48 54 64
சீட்டிழுப்பு வாரம் 824
2022.02.07 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 210,920,827/-
011-2 333 546-47
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணக்கட்டுப்பாடு விதிக்கும் திட்டம் எதுவும் இல்லை

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் பயணக் கட்டுப்பாடுகளை விதிக்கும் திட்டம் எதுவும் இல்லை என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

ஊடக சந்திப்பொன்றில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பயணங்களைக் கட்டுப்படுத்துவீர்களா? என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவி வரும் நிலையில், அனைத்து மக்களும் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை கடைப்பிடித்து பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். (ம)

# கிழக்கு மாகாண பிரதம செயலாளராக துசித்த பி.வனிகசிங்க நியமனம்



(கொழும்பு)

கிழக்கு மாகாண பிரதம செயலாளராக துசித்த பி. வனிகசிங்க மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து அவர் நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார். (ம)

# உயர்தரப் பரீட்சையில் வினாத்தாள் காலதாமதம்

## மாணவர்கள், பெற்றோர்கள் விசனம்

(மட்டக்களப்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நேற்று (திங்கட்கிழமை) ஆரம்பமான நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு (களுவாஞ்சிக்குடி) தேசிய பாடசாலை பரீட்சை நிலையத்தில் நடைபெற்ற பரீட்சையின்போது வினாத்தாள் காலதாமதமாக வழங்கப்பட்டதாக மாணவர்களும் பெற்றோரும் விசனம் தெரிவித்தனர்.

நேற்றைய தினம் நடைபெற்ற இணைந்த கணித பாட பரீட்சையின் போது, வழங்கப்பட்ட வினாத்தாள்களில் முதலாம் பகுதியும் இரண்டாம் பகுதியும் காலை 8.30 மணிக்கே மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் குறித்த தாள்களில் இரண்டாம் பகுதி வினாத்தாள் காலை 8.30 மணிக்கு வழங்கப்பட்டிருந்ததோடு, மற்றைய முதலாம் பகுதி வினாத்தாள் இன்னும் வழங்கப்படவில்லையே என மாணவர்கள், பரீட்சை மேற்பார்வையாளரிடம் கோரியதற்கிணங்க, அதன்பின்னர் காலை 10 மணியளவில் மற்றைய வினாத்தாள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் எனினும் பரீட்சை வினாத்தாள்கள் 11.40 மணிக்கு சரியாக முடிவுறுத்தப்பட்டதாகவும் மாணவர்களும் பெற்றோரும் விசனம் தெரிவித்தனர்.

இவ்விடயம் குறித்து பெற்றோர் பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்திற்குச் சென்று தமது பிள்ளைகளுக்கு நடந்த அநீதி தொடர்பில் எழுத்துமூலம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இவ்விடயம் அறிந்த பாராளுமன்ற உறுப்பினர், இரா.சாணக்கியன், பட்டிருப்பு வலயக்கல்வி அதிகாரிகளுடனும் பெற்றோர்களுடனும் கலந்துரையாடினார்.

நேற்று நடைபெற்ற பரீட்சையின்போது மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட தவறு தொடர்பாக குறித்த பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதாக வலயக்கல்விப் பணிப்பாளர் தன்னிடம் தெரிவித்ததாக இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

எனினும், மாணவர்களுக்கு நடந்த அநீதி தொடர்பில், தான் கல்வி அமைச்சரை நேரில் சந்தித்து அவரது கவனத்திற்குக் கொண்டு செல்லவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

# பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்ட 8 பேருக்கும்

## வவுனியா நீதிமன்றத்தால் பிணை

(வவுனியா)

குண்டுகளை தம்வசம் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தில் 2019ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 8 பேருக்கு வவுனியா நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியுள்ளது.

2019ஆம் ஆண்டு முதலாம் மாதம் 5ஆம் திகதி புளியங்குளம் பொலிஸாரால் கிளைமோர் குண்டை வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 3 பெண்கள் மற்றும் 5 ஆண்கள் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இதில் 9ஆவது சந்தேகநபரான ஆனந்தராஜா என்பவர் கைது செய்யப்படாத நிலையில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த 8 பேருக்கும் ஆதரவாக சிஎச் ஆர்டி நிறுவனம் சட்ட உதவியை வழங்கியிருந்தது.

இந்நிறுவனத்தின் ஊடாக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கலும் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனைச் சபை குறித்த விடயம் விசாரணைக்காக பாரப்படுத்தப்பட்டு விசாரணை நடத்தப்பட்ட நிலையில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந் தது.

இதன் பலனாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் 7:1 பிரிவின் பிரகாரம் சட்டமா அதிபரினால் பிணையில் விடுவிப்பதற்கான சம்மதக் கடிதம் நீதிமன்றத்திற்கு அனுப்பட்டிருந்தது.

இந்நிலையில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் சார்பில் வவுனியா நீதிமன்றத்தில் சட்டத்தரணி செ.கேதீஸ்வரன் ஆஜராகி குறித்த கடிதம் தொடர்பில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதன் பிரகாரம் 8 பேரும் நேற்று பதில் நீதிபதி க.தயாபரனால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

(ம-250,299)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.
(10089)
076 825 7716 (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(3730)

சாவகச்சேரி, கல்வயல், பெருங்குளம்
அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய
பொதுச்சபைக் கூட்டம்-2022
மேற்படி பொதுச்சபைக்கூட்டம் 13.02.2022 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் ஆலய மணிமண்டபத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நிகழும். ஆலயத்துக்கான புதிய தர்மபரிபாலன சபையினை தேர்வு செய்தல் பிரதான நிகழ்வாக அமையும். மேற்படி ஆலயத்து அடியவர்கள் தவறாது சமுகம் தரவும்.
தலைவர்
P.சின்னத்துரை
(C-3727)
செயலாளர்
இ.கிருஷ்ணசாமி

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-3679)
0768226240 DHL

பொருட்கள் விற்பனைக்கு
சிறிது காலம் பயன்படுத்தப்பட்ட நல்ல நிலையில் உள்ள பொருட்கள் விற்பனைக்கு உண்டு.
❖ தண்ணீர் வவுசர் (2000L)
❖ பிளாஸ்ரிக் தண்ணீர் ராங் (1000L, 500L)
❖ ஜன்னல் நிலை (மரம்)
❖ ஜன்னல் கிறில் (இரும்பு)
❖ டிப்பர் சைற்படல்
❖ இரும்பு நெற் கூடுகள் (புறா, முயல் வளர்க்க உகந்தது)
❖ காவலாளி கொட்டகை (இரும்புத் தகரம்)
V.S.K கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
கண்டி வீதி,
சாவகச்சேரி.
077 649 1027
(C-3728)

சிமெந்து கல் அடிக்கும் வேலையாள் தேவை
சாவகச்சேரி பகுதியில் இயங்கிவரும் கல்அடிக்கும் ஆலை ஒன்றுக்கு மெசின் கொங்கிறீட் கல் அடிக்கும் வேலையாள் தேவை.
அனுபவம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
தொடர்புகளுக்கு
077 940 0963
(C-3729)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.